Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 20 [02-04-1993] வெள்ளிக்கிழமை ஓசை 48

## வைத்தியர் பற்றாக்குறை மன்னாரில் நெருக்கடி

மன்னார் ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பணிபுரிந்த பிரெஞ்சு எம்.எஸ்.எப். சர்வ தேச தொண்டர் நிறுவன டாக்டர்கள் கடந்தமாத நடுப்பகுதியில் தமது கடமையை முடித்துக்கொண்டு சென்று விட்டனர். இதனால் இங்குள்ள நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# ஒளித்திருந்த 'புளொட்'டினர் மீது புலிகள் அதிரடித் தாக்குதல்

## 6 தேச விரோதிகள் பலி
## நொச்சிமோட்டையில் சம்பவம்

[வவுனியா]

வவுனியாமாவட்டம் நொச்சிமோட்டைக் காவலரணிலிருந்து சிறிது தூரம் முன்பாக வந்து ஒளிந்து நிலை எடுத்திருந்த 'புளொட்' குழுவினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர்மின்னல்வேக அதிரடியில் ஆறு 'புளொட்' தேசவிரோதிகள் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவரின் சடலமும், பல நவீன ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

நொச்சிமோட்டை காவலரணிலிருந்து 100 யார் முன்பாக வந்து நிலையெடுத்திருந்த புளொட் குழுவினர் மீது நேற்று காலை 8.30 மணியளவில் விடுதலைப் புலிகளால் இத்திடீர் மின்வேக அதிரடித் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்ட காளிதாசன் (காளி-மட்டுநகர்) என்பவரது உடல் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்தினரின் இரண்டு காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆர்.பி.ஜி. தாக்குதலில் இரண்டு காவலரண்களும் தகர்க்கப்பட்டன. இத்தாக்குதலில் சிறிலங்கா இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நேற்று நொச்சிமோட்டையில் விடுதலைப் புலிகளால் புளொட் குழுவினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ரி 81 துப்பாக்கிகள் - 04
- அதற்குரிய மகசின் - 13
- நடுத்தர ரவைகள் - 102
- ஏ. கே. கோல்சர் - 01

## தமிழ் இளைஞர் குழுக்கள் கனடாவில் மோதல்

### 6 கார்கள், மதுபானசாலை சேதம்

கனடாவில் ரொரான்ரோ நகரில் இரு இலங்கை தமிழ் இளைஞர் கோஷ்டிகளிடையே நடந்த கைகலப்பில் கனேடியர் உட்பட பலர் காயமடைந்தனர். ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறு இரவு ஸ்கபரோ பகுதியில் நடந்த இச் சம்பவம் தொடர்பாக 8 பேர் கனேடியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். பொலிசார் விரைந்து செயற்பட்டு நிலைமையைகட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். சுமார் அரை மணி நேரம் கைகலப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோதல் நடைபெற்ற இடத்தில் நின்ற 6 கார்களும் மதுபானக்கடை ஒன்றும் சேதமடைந்தன. தமிழ் கலாசார நிகழ்ச்சி ஒன்று தொடர்பாக எழுந்த கருத்து முரண்பாடே கைகலப்பாக மாறியது எனக் கூறப்படுகின்றது.

வவுனியா நகரத்தில்

## தமிழர் கடத்தப்படுவதை குழுக்கள் மூடிமறைப்பு

(வவுனியா)

வவுனியா நகரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தொடர்ந்து மர்மமான முறையில் தமிழ்ப் பொதுமக்கள் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இதேவேளையில் இராணுவமும் இதனுடன் இணைந்துஇயங்கிவரும் தமிழ்க் குழுக்களும் இந்த ஆட்கடத்தல் நடவடிக்கையை மூடி மறைக்கும் செயலில் ஈடுபட்டுள்ளன.

இந்த ஆட்கடத்தல் நடவடிக்கை வெறும் பொய் என்றும் சில தீய சக்திகள் இப்படியான வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள் என்றும் இதுவரையில் மூன்றுபேர் மட்டுமே காணாமல் போயுள்ளனர் என்றும் ரெலோ, புளொட் குழுக்கள் அறிக்கைகளில் தெரிவித்துள்ளன.

இக்குழுக்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போனதாகக் கூறப்படும் குறிப்பிட்ட மூன்று பேரையும் யார் அல்லது எந்த அமைப்பு கடத்தியது என்றும் இவர்கள் தற்போது எங்கு வைக்கப்பட்டுள்ளனர் என்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் மாலை 2-00மணிதொடக்கம் 3-00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை காலமும் மீட்புநிதி செலுத்தத்தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனை செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றி அரசன் அறிவித்துள்ளார்.

## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்.

மட்டு. தும்பங்கேணியில்

## ராணுவ நெருக்கடி மத்தியில் அன்னை பூபதி நினைவு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவ நெருக்கடிகளுக்குமத்தியிலும் மட்டக்களப்பில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவுக் கருத்தரங்கில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

தியாகி அன்னைபூபதி நினைவாக கடந்த 25ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தும்பங்கேணி கற்பக விநாயகர் ஆலய மூன்றலில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இக் கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் வெல்லாவெளி உ.அ. அதிபர் பிரிவுபொறுப்பாளர் திரு.கௌசிக்கலந்து

(09ஆம் பக்கம் பார்க்க)

## நேர் உச்சியில் சூரியன்

எதிர்வரும் புதன் கிழமை பகல் 12.13 மணியளவில் கொழும்பிற்கு மேலாக நேர் உச்சியில் சூரியன் வரும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

முல்லையில்

## இரு முஸ்லிம் மீனவர் புலிகளால் விடுவிப்பு

(முல்லைத்தீவு)

சிறிலங்காகடற்படையினரின் தாக்குதலுக்குத் தப்பி முல்லைத்தீவு கடற்கரையை வந்தடைந்த இரு முஸ்லிம் மீனவர்களை விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதியிடம் கையளித்தனர்.

திருக்கோணமலை புல்மோட்டைக் கடற் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி புல்மோட்டையைச் சேர்ந்த அலியார் லெவ்வை இராசமுகமட் (வயது 26), முத்தாலீப்மனாப் (வயது26) ஆகியஇருவரும்மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகொன்று இவர்களது படகை நோக்கி வந்தது.

இதனைக் கண்ட இவர்கள் இருவரும் தம்மிடமிருந்த

(09ஆம் பக்கம் பார்க்க)

## மார்புநோய் சிகிச்சை நிலையம் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கைகாரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின்புறம் இயங்கிவந்த மார்புநோய் சிகிச்சை நிலையம் இம்மாதம் நடுப்பகுதியில் யாழ். மணிக்கூட்டுவீதி எரிபொருள் நிலையத்திற்கு முன்னால் உள்ள கட்டடத்திற்கு இடமாற்றப் படவுள்ளது.

இதேவேளை இந்நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான விடுதி வசதி இன்மையால் நோயாளர் பெரும் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காங்கேசன் ஊடாக உணவு பலாலியில் பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களை வாகன அணிமூலம் கொண்டுவருவதற்கானவிரிவானபேச்சுவார்த்தை நேற்று பலாலியில் நடைபெற்றதாக தெரிய வருகின்றது. இதே வேளை மேலும் ஒரு சுற்றுப் பேச்சுக்கள் இன்று நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது இப்பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி நாளை பலாலியிலிருந்து திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

## ஏனைய சங்கங்களிலும் அரிசி, பால்மா விநியோகம்

குடாநாட்டு மக்களுக்கு அரிசியை நியாய விலையில் வழங்குவதென்ற திட்டப்படி ஏற்கனவே வழங்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் தவிர்ந்த ஏனைய சங்கங்களுக்கூடாக, குடும்பம் ஒன்றிற்கு மூன்று கிலோ அரிசியும், ஆறு மாதத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 400 கிறாம் லக்ரோஜன் பால்மாவும் வழங்கப் படவுள்ளது.

பின்வரும்சங்கங்களில்பங்கீட்டுப் பொருள்களைப்பெறுபவர்கள், தமது குடும்ப அட்டையையும், பங்கீட்டு அட்டையையும் காண்பித்து நாளையிலிருந்து நான்கு நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், நீர்வேலி சங்கானை மானிப்பாய், சுன்னாகம்ஆகிய சங்கங்கள் குத்தரிசி ஒரு கிலோ 30 ரூபாவாகவும், 400கிறாம் பால்மா (மாசி 94 வரை பாவிக்கக் யது) 80 ரூபாவாகவும் வழங்கும்.

## பத்திரிகையாளர் மீது தாக்கு பொலிஸ் அதிகாரி பொறுப்பு

### விசாரணைக்குழு தீர்ப்பு

(கொழும்பு)

கொம்பனி வீதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியே பத்திரிகையாளர் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டார் என விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொம்பனி வீதியில் கடந்த ஆண்டு பத்திரிகையாளர்கள் பொலிஸாரினால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நீதிபதி தனது அறிக்கையிலேயே இவ்வாறு

(09ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வீட்டிலே சத்துணவு

அன்றாட சத்துணவு தேவைக்கு வீட்டுத்தோட்டம். அவற்றின் அமோக விளைச்சலுக்கும் பயிர் பாதுகாப்புக்கும் ''நீமியா உரம்''. அண்ணா கோப்பிக்கடைகளிலும்கிடைக்கிறது. ஒரு கிலோ விலை ரூபா. 18/-

(சி-6318) ''மில்க்வைற்''

### நெல்லிக்காய்

பழுதடைந்த நன்கு முற்றிய நெல்லிக்காய் நாற்று விதைக்காகத் தேவைப்படுகிறது.

மில்க்வைற் (சி/6319)

### சீட்டிழுப்பு

புத்தூர் எவறெஸ்ற் வி.கழகத்தின் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு விபரம்; முதலாம் பரிசு 1198, இரண்டாம்பரிசு 1386, மூன்றாம் பரிசு 209, ஆறுதல் பரிசுகள். 2427, 1886, 2229, 1021, 1743. பரிசுக்குரியவர்கள் மேற்படி கழக நிர்வாகிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

(4610) நிர்வாகிகள்.

### தேவை

ஜாம் போத்தல்கள், பன்றா கொக்கோகோலாவகையிலான 300 மில்லி லீற்றர், 160மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும்.

சுரபி, பழரசத்தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு கோப்பாய். (சி-6322)

---

யா/உரும்பராய் இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

### புனரமைத்தல்

காலம்: 04. 04. 1993
ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 9. 00 மணி

இடம்: கல்லூரிமண்டபம்

கல்லூரி வளர்ச்சிக்காக புனரமைக்கப்படும் இப்பொதுக் கூட்டத்திற்குப் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது வருகை தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்

(4608)

---

சாவகச்சேரி

Past Paper classes for
*A/L* Science
Students 93

ஆரம்பம்

ஏப்ரல் 03

சனிக்கிழமை
பிற்பகல் 3.00 மணிக்கு

தென்மராட்சி வாழ் மாணவரின் பிரயாணக் கஷ்டங்களை நிவர்த்திக்கும் நோக்கில்

தலைசிறந்த ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை

## பளிங்கு

பிரதான வீதி,
(மக்கள் வங்கி முன்பாக)
சாவகச்சேரி.

(3386)

---

யாழ்ப்பாண மாநகரசபை

## ஆதனவரி தொடர்பான அறிவித்தல் - 1993

பொது மக்களின் வேண்டுகோளுக்கமைய ஆதனவரி செலுத்துதல் தொடர்பான காலஎல்லைகள் கீழ்க்கண்டவாறு மாற்றம்செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்:

★ 1993.1ஆம் கந்தாயவரியினைதண்டமின்றி30 06.93 வரை செலுத்த முடியும்.

★ 1993ஆம் ஆண்டுக்குரிய முழுவருட வரியினையும் ஏப்பிரல் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி 10% வரிக்கழிவினையும், 1ஆம் கந்தாய வரியினை தனித்து செலுத்துவதன் மூலம் 5 வீதம் வரிக்கழிவினையும் பெற்றுக கொள்ளலாம்.

வே.பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31.03.1993.

(சி/6312)

---

UNIVERSITY OF JAFFNA Shri Lanka.

## External Examination 1991 / 92:

FIRST IN ARTS
FIRST IN COMMERCE
GENERAL ARTS Part I
SPECIAL ARTS DEGREE Part I
COMMERCE Part I

Examination Entry forms will be received from registered candidates, who wish to sit the above examination scheduled to commence in August / September 1993.

Examination Entry forms could be obtained from the External Examinations and Registration Unit University of Jaffna in person or by post from 02-04-1993.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Shroff, Finance Branch of the University of Jaffna for the payment of Rs. 15/- Those who wish to obtain the forms by post are required to send a money order/postal order for Rs. 15/- drawn in favour of Bursar University of Jaffna together with a self addressed envelop affixing stamp to the value of Rs. 12/-.

Completed Examination Entry forms should be submitted to the External Examinations & Registration Unit on or before 15 05-1993

Registrar

University of Jaffna (சி-6313)

---

## வளரும் வாழ்த்துக்கள்

### ஆதார வைத்தியசாலை

பருத்தித்துறை

வடமராட்சி கம்பன்கழக அமைப்பாளர் ஊடாக
அகில இலங்கை கம்பன்கழக
அமைப்பாளர், அவர்கட்கு
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

இவ்வாண்டு மகர யாழ் விருதை Dr, ந. ச. சிவகுமாரன் அவர்களுக்கு வழங்க தங்கள் கழகத்தால் எடுக்கப்பட்ட முடிவு மிகவும் பொருத்தமானதும் பாராட்டுக்குரியதுமாகும். சொந்த மண்ணின் பற்றும், தியாக உள்ளமும் கொண்ட இப்பெருந்தகையை கௌரவித்து, கம்பன்கழகம் தன் தூயபணியின் நேர்மையையும், உயர்வையும் எடுத்துக் காட்டியுள்ளது. வைத்தியதுறையை சேர்ந்தவர் என்ற வகையில் இவ்வைத்தியசாலையின் பதில் மாவட்ட வைத்திய அதிகாரி என்ற முறையில் நானும் சக ஊழியர்களும் அவரது தெய்விகப்பணி இன்னும் பல்லாண்டு தொடரவேண்டுமென மனமார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இங்ஙனம்
Dr. R. குழந்தைவடிவேல்
[பதில்மாவட்ட வைத்திய அதிகாரியும்
மகப்பேற்று வைத்திய நிபுணரும்]

[3420]

---

## 18-வது பிறந்த தினமும் 6ஆம் மாத நினைவு நாளும்



வீரப்பிறப்பு
2-4-1975

வீரச்சாவு
2-10-1992

### 2ஆம் லெப். மங்கை [தர்ஷா]

[பாமினி சிவநாதன், சித்திரமேழி இளவாலை]

சித்திரமேழியிலே மறவர் மங்கையாய் ...
கட்டைக் காட்டினில் காவிய நாயகியாய்.
அஞ்சாத துணிவோடு அரக்கரோடு களமாடி
பிஞ்சாகி காயாகி கனியாக மாறாது
நெஞ்சாகி நினைவாகி நீள் துயரை எமதாக்கி

தம்பியின் படையிலே தர்ஷாவாய் அணியிலே
அரசியல் அறிவுடனே அணியாகி படையானாய்
அறியா உலகிலே அமரத்துவம் ஆனாயோ
அண்ணனும் உன் வழியில் தமிழ் ஈழ அணியிலே

வேரின்றி மரமாய் தாயவரும்
நீரின்றி நதியாய் தந்தையவரும்
உணர்வின்றி ஊனின்றி
துணையின்றி இணையின்றி போனாயோ எம் செல்வி.

உன் ஆத்மா சாந்தியடைய ஞானவைரவர் அருள் வேண்டுகிறோம்.

''பரமவாசா''
V. C. ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(4606)

உன் நினைவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணா தங்கைகள்,
அம்மப்பா, மாமா, மாமி,
பிள்ளைகள்.

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-02

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - கண்டி வீதியில் 18-ம் போர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத் தொடர் வாகன வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**பெஞ்சமின்** (கந்தையா பாலசுந்தரம் - சேனைப்புலவு, நெடுங்கேணி, மணலாறு)

**மோகன்** (யாக்கோப் தற்குரூஸ் அலெக்ஸாண்டர் - தோட்டவெளி - தாராபுரம் - மன்னார்)

**யோகன்** (ஞானப்பிரகாசம் பேணாட் கிறிஸ்ரீ மொறாயஸ் - வங்காலை - மன்னார்)

**2-ம்லெப். வதனன்** (சபாபதி சிவபாலன் - 6ஆம் படிவம், வாரிக்குட்டியூர் - வவுனியா)

1987ஆம் ஆண்டு யாழ். தொண்டமானாறு மயிலியதனையில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2-ம்லெப். ஜஸ்ரின்** (ஜோசப் தனசீலன் மைக்கல் அன்ரன் - தலைமன்னார் - மன்னார்)

**2-ம்லெப். மார்சல்** (விக்கினராசா சந்திரவேல் - வெள்ளாங்குளம் - முழங்காவில் - மன்னார்)

**லெப். பாபு** (செல்வநாயகம் ரவீந்திரன் - சிவபுரவீதி, ஊரிக்காடு - வல்வெட்டித்துறை - யாழ்.)

**சிவா** (சின்னத்தம்பி சிவதாஸ், தேனாவளவு - கரணவாய் வடக்கு, கரவெட்டி)

இதே தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் வல்வை பகுதியில் வைத்து சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் முரளி** (கந்தசாமித்துரை சிறிதரன் - வேம்படி வல்வெட்டித்துறை - யாழ்.)

**2-ம்லெப். சேவியர்** (யோசப் தனசீலன் - வெற்றிலைக்கேணி - யாழ்.)

**பாலச்சந்தர்** (ஞானசேகரம் லக்ஸ்மிகரன் - முள்ளியான் வெற்றிலைக்கேணி - யாழ்.)

**விடுதலை** (ஜோன் பொஸ்கோ யோகநாதன் - தாளையடி - யாழ்.)

**சங்கர்** (கந்தப்பு சூரியகுமார் - இலகடிவீதி, கரவெட்டி மத்தி - யாழ்.

**விந்தன்** (பூபாலசுந்தரம் ஞானகுரு - ஊறணி, வல்வெட்டித்துறை யாழ்.)

மட்டு - வலையிறவில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**நடா** (தங்கராசா - நடராசா - வலையிறவு - மட்டு)

1988ஆம் ஆண்டு மட்டு - மாங்கேணிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் அடித்து கொலைசெய்யப்பட்ட -

**லிங்கன்** (நல்லதம்பி அன்ரனி - வாழைச்சேனை-மட்டு)

1989ஆம் ஆண்டு திருமலை - கட்டைபறிச்சான் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் சத்தியன்** (புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி தங்கநகர் - கிளிவெட்டி - திருமலை)

1991ஆம் ஆண்டு பனையூரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மஞ்சித்** (ரமேஸ் றொபேட் - செட்டிகுளம் - வவுனியா)

மன்னார் நானாட்டன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சவெய்திய -

**சிவகாந்தன்** (அ. தவநேசன் - சுன்னாகம் - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6315)

# பிரான்பற்று - நிச்சாமம் கிராமங்களில்

# ஓர் எழுச்சிப் பாசறை

**கணேசலிங்கம்**

செம்மண் குடிசை ஒன்றின் முற்றம். ஒரு வயதைக் கடந்துவிட்ட நான்கு குழந்தைகள். தங்களை மறந்து, பிறந்த மேனியாக மண் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். உடல் முழுவதும் படிந்து கிடக்கும் புழுதிமணல்தான் இவர்களது ஆடை. இந்தப் பச்சிளம் பாலகர்கள் பாலுணவை மறந்து பல மாதங்களாகிவிட்டன. தற்போதெல்லாம் பால்மணமற்ற வெறும் தேநீரும் பாணும்தான் இவர்களது அன்றாட உணவு. அதுவும் தினசரி இரண்டு தடவைகள் மட்டும். உடலின் தோல்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதை தடுப்பது போல் எலும்புத் தொகுதி மிண்டு கொடுத்துக் கொண்டிருந்தது. மனிதஉடலில் எத்தனைஎலும்புகள் உள்ளனஎன்பதை எண்ணிக் கொள்வதற்கு இங்குள்ள ஒரு குழந்தை போதும்.

இது சோமாலியாவின் சோகக்கதைகள் அன்று. எத்தியோப்பியாவில் கண்டு கொண்ட காட்சிகளும் அல்ல. யாழ். குடாநாட்டின் மேற்குக் கரையோரக் கிராமங்களில் ஒன்று பிரான்பற்று. அங்கு சர்வசாதாரணமாகக் காணக் கூடிய காட்சிகளில் இதுவும் ஒன்று.

கடந்த 25ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் பிரான்பற்று, நிச்சாமம் ஆகிய கிராமங்களில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் கிராமிய எழுச்சிப்பாசறை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். இந்தக் கிராமிய எழுச்சிப் பாசறையின் போதுதான் இதுபோன்ற- இதுவரை சந்திக்கு வராத பல சங்கதிகளை அறிந்து கொள்ள முடிந்தது.

ஏன் இந்த அவலம்? வறுமை. வறுமைக்கு என்ன காரணம்? வறுமையை விரட்ட முடியாதா? பொருளாதாரத்தைக் கட்டிவளர்க்க முடியாதா? இதற்கு வேண்டிய வளம் இல்லையா? இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக கேள்விக் கணைகளைத் தொடுக்கும்போதுதான் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஏகப்பட்ட பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்பட்டன.

நல்ல வளமான மண். பரந்த வயல்வெளி. சேர்ந்தாற்போல மக்களின் குடியிருப்புக்கள். குடியிருப்புக்களிடையே பரந்து கிடக்கும் முட்புதர்கள். வளர்ந்த தரிசு நிலப்பரப்பு. பல மாரிகளையும் கோடைகளையும் தாங்கி நிற்கும் பனை மரங்கள். திட்டமிட்டு அமைக்கப் படாத குன்றும் குழியும் மலிந்த வீதிகள் இவ்வாறான தரைத்தோற்றத்தைக்கொண்டவை அந்தக் கிராமங்கள்.

## பாரம்பரிய சமூக இடையூறுகள்

பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்த வண்ணம் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கிராமங்கள் பாரம்பரிய சமூக இடையூறுகள் இன்னமும் இங்கு நிலைத்து நிற்கின்றன. அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட தொழில்களை மட்டும் ஆதாரமாகக்கொண்டு வயிற்றை வளர்க்கும் பொருளாதாரப் பின்புலம். இத்துடன் போதிய கல்வி வாய்ப்பின்மை சேர்ந்து இக்கிராம மக்கள் வளர்ச்சியடைந்துவரும் வெளியுலக பொது வாழ்விலிருந்து சமூக ரீதியில் ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். பதிவு செய்யப்படாத திருமணங்களுக்கு இங்கு குறைவில்லை. வயிற்றைக்கொண்டு அவர்களது வாழ்க்கை முறையை அளந்து விடலாம். உணவுப் பங்கீட்டு அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக குழந்தை பிறந்ததும் பிறப்புப்பதிவு செய்வது இங்கு சகஜம். மரணப்பதிவும், திருமணப்பதிவும் செய்து கொள்ளவேண்டிய சமகாலத்திய தேவையை இக்கிராம மக்கள் உணர்ந்தாரில்லை. பெண் பிள்ளைகள் பருவமடைந்து சில வருடங்களில் எல்லாம்இல் வாழ்க்கையில் இறங்கிவிடுவார்கள். ஆண்களும் அப்படித்தான். திருமண உறவுகள் கிராம மட்டத்தைத்தாண்டாமல் கிராமத்துக்குள்ளேயே நடந்து விடுகின்றன கிராமம் என்ற குறுகிய வட்டத்துக்கு வெளியே திருமண உறவுகளை வைத்துக்கொள்பவர்களை கிராமத்திலிருந்து தமது உறவு முறைகளைத் துண்டித்துக் கொள்கிறார்கள்

எண்ணெய் ஊற்றுதல், எண்ணெய் வியாபாரம், வேளாண்மைத்தொழில், கள்ளிறக்குதல், கூலி வேலை' ஆகியவை இக்கிராம மக்களது பிரதான தொழில் முயற்சிகள்.

பிரான்பற்று 7ஆம் வட்டாரத்தில் 510 குடும்பங்களும், நிச்சாமம்4ஆம் வட்டாரத்தில் 242குடும்பங்களும், வேறுபகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் பல குடும்பங்களும் இங்கு வாழ்ந்துவருகின்றன. பிரான்பற்றில் நான்கு பேர் ஆசிரியர்கள், இருவர் அரச திணைக்கள வாகனச் சாரதிகள். இவர்கள் மட்டுமே அரச ஊழியர்கள் நிச்சாமத்தில் மூன்று பேர் ஆசிரியர்கள் இருவர் அரச திணைக்கள வாகனச் சாரதிகள். பிரான்பற்றில் 85 பேரும் நிச்சாமத்தில் 20 பேரும் மாதாந்த உதவிப்பணம் பெறுகின்றார்கள்.

## மண்ணை நம்பும் சுயசார்பு வாழ்க்கை

இராணுவத் தாக்குதல்கள், மற்றும் சிறிலங்கா அரசின் பொருளாதாரத்தடை போன்றவற்றால் மண்ணை நம்பியிருந்த பாரம்பரிய பொருளாதாரச் சூழல் இக்கிராமங்களில் சீர்குலைந்து போய் உள்ளது. எனினும் பொருளாதார நிர்ப்பந்த நிலையிலும் கைக்கெட்டிய வசதி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி அதே தொழில் முயற்சிகளிலேயே மக்கள் பலர் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர். சிலர் நம்பிக்கையிழந்து தொழிலைக் கைவிட்டு பல்வேறு திசைகளில் கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்துகின்றனர்,

கமம் மற்றும் கள்ளிறக்கும் தொழில் போன்ற சுயதொழிலைவிட்டு வேறுசுய சார்புத் தொழிலின்நிழலிலே ஒதுங்கிய பலர் இங்குள்ள வேறு தொழில்களை எட்டியும் பார்க்கிறார்களில்லை. எண்ணெய்த்தொழிலாளி எதிர்நோக்கிவரும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளவென கிராமிய எழுச்சிப் பாசறையின்போது எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் ஒன்று உருவாகியுள்ளது. இத்தொழிலாளர்களுக்கு தமது தொழிலில் ஈடேற்றம் பெறலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது இப்பகுதியில் சிறப்புற்றிருக்கும் தொழிலாக வேளாண்மை கருதப்பட்டது. சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் ஒரு புறம். அரசின் பொருளாதாரத் தடை, எரிபொருள்கள் மற்றும் விவசாய இடுபொருள்களின் விலை உயர்வு மத்தியிலும் இப்பகுதியில் விவசாய முயற்சிகள் தொடர்கின்றது.

நீரிறைப்பதற்கு துலாவைப் பயன்படுத்துவதற்கு நெருக்கடியின் ஆரம்பகாலத்தில் இக்கிராம மக்கள் தயக்கம் காட்டினர். பின்னர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரினால் துலாவைப் பயன்படுத்துபவர்களுக்கு மானியமும் ஊக்குவிப்பும் வழங்கப்பட்டன. இவ்வாறான மானிய உதவியைப் பயன்படுத்தி அனேக விவசாயிகள் பயிர் செய்கின்றார்கள்

இக்கிராமங்களின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ள வயல் வெளியில் கிணறுகளுக்குப் பொருத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு துலாவும் சிறிலங்கா அரசின் எரிபொருள் தடைக்கு சவாலாக தினசரி சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருக்கின்றன. பொதுவாக துலா மிதிப்பதிலும் நீர் கட்டுவதிலும் குடும்பப் பெண்கள் உட்பட குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பங்கு பற்றுவது வழக்கம்.

இக்கிராமங்களில் இருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் சிங்களப்படைகளது ஆக்கிரமிப்பு; அச்சுறுத்தல். கிராமத்தின் மீது இடையிடையே எறிகணைத்தாக்குதல்கள், இவற்றைவிட விவசாயத்தில் அதிக முதலீடு செய்வதற்கு பணவசதி இல்லாமை, விவசாய இடுபொருள்களின் விலை உயர்வு, ஆகிய இன்னோரன்ன காரணங்கள் விவசாயிகளை நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

## நிலமற்ற மண்ணின் மைந்தர்கள்

''எங்களிடம் சொந்த விவசாய நிலம் எதுவும் இல்லை. ஆனால் எங்களது பாரம்பரியத்தொழில் விவசாயம். வேறு ஒருவரது நிலத்தில் வெண்காயம் நட்டுள்ளோம். இந்த வெண்காயத் தோட்டத்தில் நாள் முழுவதும் வேலைசெய்ய வேண்டும். விளைவு காலம் வரை இந்த நிலைதான். விளைவில் ஐந்தில் ஒரு பங்கு மட்டும் எங்களுக்கு கிடைக்கும். மிகுதி நிலச்சொந்தக்காரனுக்கு. எங்களுக்கு இந்த நடைமுறையால் எஞ்சியிருப்பது பெரும் நட்டம்'' இது சொந்த நிலமற்ற ஒரு விவசாயக் குடும்பத் தலைவனின் மனக்கவலை.

இக்கிராமங்களில்வாழும்அனைவருக்கும் போதிய தொழில் வாய்ப்பு கிடைப்பதில்லை. குறிப்பிட்ட பருவ காலத்தில் மட்டுமே கூலி வேலைக்கு மவுசு தோன்றும். இவ்வாறே விவசாய தொழிலிலும் எண்ணெய் உற்பத்தியிலும், எண்ணெய் வியாபாரத்திலும் தினசரி தொழில் வாய்ப்பை சந்தை நிலைமைகளே தீர்மானிக்கின்றன.

மண்வளம், நீர்வளம், மட்டுமல்ல, மனித வளமும் இங்கு மண்டிக்கிடக்கிறது. ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்ற துடிப்பு உள்ளத்தில் எழுந்தாலும் செய்வதற்கு வசதி வாய்ப்பு எதுவும்இல்லை என்ற ஏக்கம் இப் பகுதி மக்களின் மனதில் வேரூன்றி உள்ளது.

## கல்வித்திணைக்களம் கவனிக்காத கல்விக்கூடங்கள்

''பொதுவாகத் தோட்டத்தில் சுயமாக தோட்ட வேலை செய்வதற்கு அல்லது தனியாக பனையேறி தொழில் செய்வதற்கு வேண்டிய உடல் பலம் கிடைக்கும் வரைக்குமே மாணவர்கள் பாடசாலைக்கு வருவார்கள். அதன் பின்னர் அவர்களை வயல் வெளிகளிலும், பனந்தோப்புக்களிலும் சந்திக்கலாம்''. இக்கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவரின் அங்கலாய்ப்பு இது.

விக்கினேஸ்வர வித்தியாலயம். இது நிச்சாமத்தில் உள்ள ஆரம்ப பாடசாலை. ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரையான வகுப்புக்கள் இங்கு உள்ளன. சுமார் 132 மாணவர்கள் ஆரம்பக் கல்வியை தொடர்கிறார்கள். இங்கு அதிபரைத் தவிர நிரந்தர ஆசிரியர்கள் எவரும் இல்லை. ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் இங்கு நியமிக்கப் படவில்லை. இரண்டு பயிலுனர் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சபையால் நியமிக்கப்பட்ட இரண்டு ஆசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒருவர், அங்கீகாரம் பெறாத தொண்டர் ஆசிரியர் ஒருவர். இவர்கள் மட்டுமே இப்பாடசாலையின் கற்பித்தல் தேவையை பூர்த்தி செய்கிறார்கள். கல்வித்திணைக்களம் இப்பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. சேதமடைந்த கட்டடத்தொகுதி. போதிய தளபாட வசதி இல்லை. இது போன்ற பல குறைபாடுகளுடன் பாடசாலை இயங்குகிறது.

கலைமகள் வித்தியாலயம். இது பிரான்பற்றில் உள்ள பாடசாலை ஆண்டு ஒன்று முதல் ஆண்டு எட்டு வரை வகுப்புக்கள் உள்ளன. சுமார் 403 மாணவர்கள் கல்வி பயிலுகிறார்கள். ஒன்பது நிரந்தர ஆசிரியர்கள், ஐந்து வசதிக்கட்டண ஊதியம் பெறும் ஆசிரியர்கள் இங்கு கடமையாற்றுகின்றனர். இருந்தும் இன்னமும் 7 ஆசிரியர்கள் இப் பாடசாலைக்குத் தேவைப்படுகின்றனர். பாடசாலை அபிவிருத்திச்சபையின் மூலம் தாராளமான ஒத்துழைப்பு இப்பாடசாலைக்குக் கிடைப்பதாக இப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் வரையான வகுப்புக்கள் ஆரம்பத்தில் இங்கு இருந்தன. நியாயப்படுத்த முடியாத காரணங்கள் கற்பிக்கப்பட்ட கடந்த 1989ஆம் ஆண்டு முதல் எட்டாம் ஆண்டுக்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு மூடுவிழா நடாத்தப்பட்டுள்ளது.

இவ்விரு பாடசாலைகளிலும் ஆரம்பக்கல்வியை முடித்துக் கொண்ட மாணவர்கள் இடைநிலைக் கல்விக்காக அயல் கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலை தொடர்ந்து நிலவுகிறது. அயலில் உள்ள பாடசாலைகளில் அனுமதி பெற்றுக்கொள்வதாயின் எடுத்த வீச்சிலேயே அடுக்கடுக்காகக் கூறப்படும் கட்டணங்களின் மொத்தத் தொகை வறுமையினால் வாடும் பெற்றோரை சங்கடத்தில் சிக்கவைக்கிறது. வீட்டில் வளர்த்த ஆட்டுக்குட்டியையோ அல்லது மாட்டுக் கன்றையோ விற்றுஎப்படியோ செலுத்த வேண்டிய கட்டணங்களைச் செலுத்தி புதிய பாடசாலையில் இடைநிலைக் கல்வியைத் தொடங்கும் மாணவர்கள் ஒருபுறமிருக்க, இவ்வளவுகாலமும் படித்தது போதும், தொடர்ந்தும் ஏன் படிக்கவேண்டும் என்ற மனோபாவம் வேறு. புதிய பாடசாலைக்குச் சென்றால் பல்வேறு கட்டணங்களை அடிக்கடி செலுத்த வேண்டியிருக்கும் என்ற சிந்தனையால் சிதறடிக்கப்பட்டு கல்விக்கு முற்றுப் புள்ளி வைக்கும் மாணவர்களின் சோகக்கதை ஒரு புறம். வறுமை மற்றும் பெற்றோரின் அக்கறையின்மையாலும், பாடசாலைக்குச் செல்வதைவிட தம்முடன் தோட்டங்களில் வேலை செய்தால் நமக்கு உதவியாக இருக்கும் என்று சிந்திக்கும் பெற்றோரின் போக்கினையும் பாதியிலேயே படிப்பை நிறுத்திக் கொள்ளும் மாணவர்கள் மற்றொரு புறம். இவ்வாறாக கலைமகள் வித்தியாலயத்தில் ஆண்டு எட்டு வரை படித்துவிட்டு வருடாந்தம் சுமார் 25 மாணவர்கள் இடை நடுவில் பாடசாலைக் கல்விக்கு பிரியாவிடை வழங்கி விடுகிறார்கள். இதே பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புக்கள் இருந்தால் இவ்வாறு கல்வியை நிறுத்திக் கொள்ளும் மாணவர்களது தொகையை வெகுவாகக்குறைக்க முடியும் என்று இப்பாடசாலை அதிபர் நம்பிக்கை தெரிவித்தார்.

இப் பாடசாலையில் ஏற்கனவே இருந்த உயர்வகுப்புக்களை நீக்கி விட்டதன் மூலம் வருடாந்தம் சராசரி 25 மாணவர்கள் தமது இடைநிலைக் கல்வியை இடைநிறுத்திக் கொள்வதற்கு கல்வித் திணைக்களமே காரணமாகிறது.

## மருத்துவ வசதி

போசாக்குக் குறைவினாலும், சுகாதாரச் சீர்கேடுகளினாலும் உருவாகும் பல்வேறு நோய்கள் இக்கிராம மக்களை தாக்குவதுண்டு நோய்த் தாக்கத்துக்குட்பட்டவர்களில் நோய்க்கு சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சிந்திக்காதவர்களும் உண்டு. சிகிச்சை பெற்றுக் கொள்ள முயற்சிப்பவர்களுக்கு கிராமத்துக்குள் மருத்துவமனை எதுவும் இல்லை. அயல் கிராமங்களுக்கே சிகிச்சைக்காகச் செல்ல வேண்டும். அங்குள்ள மருத்துவ மனைகளில் தேவையான மருந்துப் பொருள்கள் எந்த வேளையிலும் இருப்பதில்லை. இல்லாத மருந்துப் பொருள்களுக்காக வைத்தியரினால் எழுதிக் கொடுக்கப்படும் மருந்துப் பொருள்களைத் திறந்த வெளிச் சந்தையில் பெற்றுக் கொள்வதற்கு வேண்டிய பணம் நோயாளியிடம் இருப்பதில்லை.

(8ஆம் பக்கம் பார்க்க)

# சிறில் ரணதுங்க இல்லாத ராணுவம்

நிலாந்தன்

**1971** இல் இலங்கைத் தீவு அதன் முதலாவது ஆயுதக்கிளர்ச்சியைச் சந்தித்தபோது சிறில் ரணதுங்க ராணுவத்தில் ஒரு இளநிலை அதிகாரியாக இருந்தார். அப்பொழுது அவர் கேகாலையில் ஜே. வி. பியை ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அந்நாட்களில் அவரைச் சந்தித்த மேற்கத்தைய செய்தியாளர் ஒருவரிடம், அவர் மலேஷியாவில் கொம்யூனிஸ்ட்கள் நசுக்கப்பட்ட அநுபவத்தை நாங்கள் நினைவில் வைத்திருக்கிறோம். இவர்களையும் அவ்விதமாக நசுக்கி விடுவோம் என்ற தொனிபடக் கூறினார்.

71 இல் ஜே. வி. பி.யை, மலேஷியாவில் கொம்யூனிஸ்ட்களை பிரிட்டன் நசுக்கியது போல நசுக்க அவர்களால் முடியவில்லை. ஆனால் 89, 90களில் இந்தோனேஷிய, லத்தீன் அமெரிக்க அநுபவங்களைக் கலந்து அவர்கள். ஜே.வி.பியை அதன் உயிர்நிலை வரை சென்று நசுக்கினார்கள். அப்பொழுது ரணதுங்க ஒரு ஜெனரலாகி விட்டிருந்தார்.

மெலிந்த, அதிகம் உயரமில்லாத தோற்றம். நரைத்த, அடர்த்தியான மீசை. ரணதுங்க, ஒரு பட்டதாரியாக ராணுவத்துள் நுழைந்தார். ஒரு பிரிகேடியராக ஓய்வு பெற்றார். பின்னர் சேவை நீடிப்பின் அடிப்படையில் கூட்டுப்படைத் தளபதியானார். அங்கிருந்து ஒரு ஜெனரலாக உயர்ந்தார். கடைசியாக பாதுகாப்பு அமைச்சின் செயலராயிருந்து கடந்த மாதம் ஒளஸ்ரேலியாவுக்கான சிறிலங்காவின் தூதுவராக நியமிக்கப்பட்டதோடு படைத்துறைச் சேவையிலிருந்தும் ஓய்வு பெறுகிறார்.

சிறிலங்காவின் ராணுவ சேவையிலிருந்து ராஜதந்திர மற்றும் நிர்வாக சேவைகளுக்கு மாற்றப்படும் மூன்றாவது முக்கிய நபர் ரணதுங்க. இவருக்குமுன ஜெனரல் சேபால ஆட்டிக்கல லண்டனுக்கான சிறிலங்காவின் தூதுவராகவும் ஜெனரல் வீரதுங்க வட-கிழக்கு மாகாணசபையின் ஆளுனராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஈழப்போரில், ரணதுங்கவை விட சேவை மூப்புக்குறைந்த தளபதிகள் கெமுனுக்களாக உயர்ந்து சென்றார்கள். குறிப்பாக கொடபேகடுவ அவரது குடும்பப் பின்னணி காரணமாக திடீரென்று எழுச்சி பெற்றார் ஆனால் ரணதுங்க மற்றவர்களின் கவனத்தை சடுதியாக ஈர்க்காத ஒரு ஜெனரலாகவே தொடர்ந்தும் இருந்தார். ராணுவத்தின் நலன்களை எதருணத்திலும் விட்டுக்கொடாத ஒரு ஜெனரல். அவர் பதவி பேதங்களிற்குள் சிக்குண்டதில்லை. மிகவும் குறிப்பாக கட்சி பூசல்களிற்குள் சிக்குண்டதில்லை அவர் எப்பொழுதும் ஆட்சி பீடத்திற்கு - அங்கு யார் இருந்தாலும் - விசுவாசமானவர். என்பதால் அதிகம் சர்ச்சைக்குள்ளாகாதவர்.

அவர் ஜெயவர்த்தனாவிற்கு நெருக்கமானவர். ஜெயவர்த்தன அவரிற்கு அதிகம் முதன்மை தந்தார். இதற்காக பிரேமதாஸ அவரை ஒதுக்கி வைத்தார் என்பதற்கில்லை. அவர் பிரேமதாஸவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்தார். திருமதி பிரேமதாஸவிற்கு அவர் ஒரு விதத்தில் உறவு என்றும் சொல்லப்படுகின்றது.

சிறிலங்காவின் நவீன வரலாற்றில் பல அழிவான திருப்பங்களின் துவக்கமாயிருந்த ஒபறேஷன் லிபறேஷனை 87 இல் ரணதுங்க வடிவமைத்தார். தாக்குதலிற்குத் தலைமையும் தாங்கினார். பின்னர், ரஜீவ்-ஜே. ஆர் உடன்படிக்கை உருவானபோது யூ. என் பிக்குள் தோன்றிய உடன்படிக்கைக்கு எதிரான அமைச்சர்களைச் சமாதானப்படுத்துவதற்காக ஜே ஆர். ரணதுங்கவைப் பயன்படுத்தினார். ராணுவம் ஏன் யாழ் நகரைப் பிடிக்கமுயலவில்லை என்ற கேள்விக்கு ரணதுங்க, அமைச்சர்கள் முன்பு விளக்கமளித்தார் யுத்தத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஒரு தளபதியின் வாக்குமூலத்தை. அமைச்சர்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை ஜே. ஆர். விவேகத்தோடு கணித்திருந்தார். ரணதுங்க அமைச்சர்களிடம் சொன்னார்: நிலப்பரப்புக்களை பிடிப்பதல்ல பிரச்சினை. பிடித்த பகுதிகளைத் தக்க வைப்பதுதான் முக்கிய பிரச்சினை என்று. இதற்கு இருக்கின்ற துருப்புக்கள் போதாது என்றும் மேலும் நாலு பட்டாலியன்கள் தேவை என்றும் அவர் சொன்னார். பலாலியிலிருந்து வரும் விநியோக வழியைப் பாதுகாக்க மேலும் இரு பட்டாலியன்கள் தேவை என்றும் அவர் சொன்னார். வடமராட்சியில் புலிகள் ஒரு வானூர்தியை சுட்டு வீழ்த்திய பின் விமானிகள் அப்பகுதியில் பறக்க மறுத்து விட்டதாகவும். இதனால் அங்கு விநியோகங்கள் துண்டிக்கப்படக் கூடிய நிலை காணப்பட்டது என்றும் அவர் மேலும் சொன்னார். இந்த விபரங்களையெல்லாம் பின்னாளில் ஜே. ஆர், சின்கா ரணதுங்க, ரோகான் குணரட்ண போன்றோரிடம் கூறியிருக்கிறார்.

ஜெயவர்த்தன, பிரேமதாஸ இருவரும் ரணதுங்கவை பாதுகாப்பு அமைச்சின் செயலராக நியமிக்க முன்வந்தார்கள். ஆனால் ரணதுங்க அதை ஏற்க மறுத்து விட்டார் என்று கூறப்படுகிறது. 89 இல் பாதுகாப்பு அமைச்சின் செயலராயிருந்த சேபால ஆட்டிக்கல லண்டனிற்கு சிறிலங்காவின் தூதுவராக நியமனம் பெற்றார் ஆட்டிக்கல தனது முன்னைய பதவிக்கு மிகத்தோதான ஆள் ரணதுங்கதான் என்று சிபாரிசு செய்தார்.

89இல் ரணதுங்க, பாதுகாப்புஅமைச்சின் செயலராக நியமனம் பெற்றபோது, பிரேமதாஸவிற்கும், புலிகளிற்கும் இடையில் இணக்கம் காணப்பட்டிருந்தது. ரணதுங்க சேபால ஆட்டிக்கலவைப் போலல்லாது மேற்படி இணக்கத்தோடு ஒத்துவராத உயர் அதிகாரிகளில் ஒருவராயிருந்தார். அவர் பின்னர் றோகன் குணரட்ணவிடம் சொன்னார்; ''புலிகள் அநேகமாக ஆயுதங்களிற்குத் திரும்பி விடுவார்கள் என்றுநான் நயபினேன்'' என்று. அந்நாட்களில் ஆட்டிக்கல ஒரு நெகிழ்ச்சிமிக்க ராஜதந்திரி போல நடந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. அப்பொழுது ராணுவத் தளபதியாக இருந்த ஹமில்டன் வனசிங்க அநேகமாக அமைதியான ஒரு பார்வையாளராகக் காணப்படுவாராம். ஆனால் ரணதுங்க தூய ராணுவக் கண்ணோட்டத்துடன்காணப்படுவாராம். ராணுவத்தின் நலன்களில் அவர் பிடிவாதமாயும் விட்டுக்கொடுப்புக்களின்றியும் நடந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

புலிகளிற்கு பிரேமதாஸ ஆயுதம் தந்ததாகக் கூறப்படுவது பற்றி றோகான் குணரட்ண ரணதுங்கவிடம் விசாரித்தபோது அது பிரேமதாஸவிற்கும் ஆட்டிக்கலவிற்கும் இடையிலான ஒரு ரகசியம் என்ற தொனிப்பட அவர் சொல்லியிருக்கிறார். ''புலிகளிற்கு ஆயுதம் தருவது சம்பந்தமாகவிவாதிக்கப்பட்டது. ஆனால் புலிகளிற்கு நாம் ஆயுதம் தந்திருக்கிறோம் என்பது நாட்டில் எல்லோருக்கும் தெரியவந்தபோதுதான் எனக்கும் தெரியவந்தது'' என்று அவர் மேலும் சொல்லியிருக்கிறார்.

தனது துருப்புக்களின் வெற்றிகளைத் தவிர வேறெதைப் பற்றியும் சிந்திக்காத ஒரு ஜெனரலாக இருந்ததற்கான பரிசு இப்பொழுது அவரிற்குத் தரப்பட்டிருக்கிறது. அவரைப் பொறுத்தவரை புதிய பொறுப்பு எல்லாவிதங்களிலும்பதவி உயர்வுதான் ஒவ்வற்ற, நிச்சயத்தன்மைகள் அற்ற சலிப்பூட்டும் யுத்த அரங்கிலிருந்துஅவர் விலகிச் செல்கிறார். ஒய்வுள்ள அங்கீகாரமுள்ள ஒரு ராஜதந்திரியாக சர்வதேச அரங்கை நோக்கிச் செல்கிறார்.

ரணதுங்கவின் இடத்திற்கு முன்னாள்வான்படைத்தளபதி வோல்ற்றர் பெர்னாண்டோ நியமனம் பெற்றிருக்கிறார். பிரேமதாஸ, ரணதுங்காவை நாகரிகமான விதத்தில் யுத்த அரங்கிலிருந்தும் அகற்றியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். எப்பொழுதும் ராணுவத்தின் நலன்களோடேயே நிறகும் ஒரு அங்கீகாரமுள்ள, மூத்த தளபதியை அரங்கிலிருந்து அகற்றுவதன் மூலம் ராணுவ உயர் பீடத்தில் அவர் தொடர்ச்சியான மாற்றங்களின் மூலம் உருவாகியுள்ள முரண்பாடுகளைப் பேணுவது சுலபம் என்று பிரேமதாஸ கருதுகிறாரா? படைத்துறை உயர் பீடத்தில் இந்த ஆண்டில் செய்யப்பட்ட இரண்டாவது மாற்றம் இது.

ஏற்கனவே கடந்த ஆண்டு முழுவதும் ராணுவ உயர் பீடத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் தளபதிகளைக் குழுக்களாக்கியுள்ளன. யுத்த தந்திரோபாயங்களிலிருந்து ஆயுதக் கொள்வனவுகள் வரை தளபதிகள் ஒருவர் மற்றவரோடு ஒத்துப் போகாதவர்களாகக் காணப்படுகிறார்கள். திடீரென்று அதிகாரங்கள் தரப்படுவதும், பறிக்கப்படுவதும் தளபதிகளிற்கிடையில் கௌரவப்பிரச்சினைகளை வளர்த்துவிட்டிருக்கிறது. கூட்டுப்படைத் தளபதி ஹமில்ரன் வனசிங்கவிற்கும் முப்படைத் தளபதிகளிற்கும் இடையில் உறவுகள் நன்றாயில்லை. குறிப்பாக ஹமில்ரனிற்கும் சிசில் வைத்தியரட்ணவிற்கும் இடையில் அநேகமாக ஒத்துப்போவதில்லை. சிசில் வைத்தியரட்ண ரணதுங்கவுடன் ஒத்துப்போனவரில்லை. கடந்த செப்டம்பரில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ராணுவ முகாம்களை வாபஸ் பெறுமாறு ரணதுங்க கூறியபோது வைத்தியரட்ண பிடிவாதமாக மறுத்துவிட்டார். ரணதுங்க சொன்னபடி செய்வதானால் தான் பதவிவிலகப் போவதாகவும் அவர் எச்சரித்தார், ரணதுங்கவோடு வைத்தியரட்ண எப்படி ஒத்துப்போவதில்லையோ, அப்படித்தான் ரணதுங்கவின் இடத்திற்கு இப்பொழுது நியமிக்கப்பட்டுள்ள வோல்ற்றர் பெர்னாண்டோவோடு வான்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனவும் ஒத்துப்போவதில்லை. கடந்த வருடத்தின் இறுதியில் புதிதாக விமானங்களைக் கொள்வனவு செய்வதில் இந்த இரு வான்படைத் தளபதிகளும் கடுமையாக மோதிக் கொண்டார்கள்.

ரணதுங்க போன்ற ராணுவத்தின் நலன்களைப் பிடிவாதமாகப் பேண முயல்கிற மூத்த அங்கீகாரமுள்ள தளபதிகளை அவர்களிற்கு நோகாத விதத்தில் காட்சியிலிருந்து அகற்றும் அதேசமயம், ரணதுங்கவைப்போன்று முதிர்ச்சியும் அங்கீகாரமும் பெற்றிராத, ஆனால் முரண்பாடுகளை ஏதோ ஒரு தளத்தில் தொடர்ந்தும் பேணக்கூடிய தளபதிகளை, பிரேமதாஸ தனக்கு வசதியான இடங்களிற்கு நகர்த்தி வருகிறார்.

இது ஏற்கனவே பல முறை இப்பத்தியில் கூறப்பட்டிருக்கிறது.

தளபதிகளின் முரண்பாடுகளின் மீது பிரேமதாஸ தனது நாற்காலியை ஆடாமல் வைத்திருக்கப் பார்க்கிறார் என்று.

## செவ்விந்திய

ப்பியக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். 500 வருட காலனித்துவம் செவ்விந்தியருக்கு ஏற்படுத்திய தாக்கங்களையும், செவ்விந்தியர்களின் தேசிய அடையாளங்களையும் வெளிக்கொணர்ந்து சிதறிக் கிடக்கும் செவ்விந்திய மக்களை அணிதிரட்டுவதே இந்த ''500 வருட எதிர்ப்பு'' இயக்கத்தின் நோக்கங்களாகும். கடந்த வருடம் அக்டோபர் மாதம் குவாத்தமாலாவில் இடம்பெற்ற அமெரிக்க கண்டத்திற்கான இவ் எதிர்ப்பியக்கத்தின் மாநாடு சர்வதேச முற்போக்கு அணிகளின் கவனத்தையும் ஆதரவையும் திரட்டுவதில் செவ்விந்தியர்களுக்கு பெரும் வெற்றியை பெற்றுத்தந்துள்ளது.

தற்போது செவ்விந்திய மக்களின் மனித உரிமைகளுக்காகப் போராடிவரும் குவாத்தமாலா விவசாய அமைப்பைச் சேர்ந்த மஞ்சு (Rigoderta Menchju) என்ற பெண்மணிக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்துள்ளதும், 1993ஆம் ஆண்டு பழங்குடி மக்களின ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதும், செவ்விந்திய மக்களின் போராட்டங்களுக்கு மேலும் அங்கீகாரத்தையும், ஆதரவையும் பெற்றுத்தரும் என்றே நம்பப்படுகின்றது.

கொலம்பஸ் கால்பதிப்பதற்கு 11000 வருடங்களுக்கு முன்பிருந்தே செழிப்பான நாகரிகத்துடன் மக்கள் வாழ்ந்த பிரதேசத்தை தாமே கண்டுபிடித்ததாகவும், அக் ''கண்டுபிடிப்பு'' செவ்விந்திய மக்களுக்கு இழைத்த அவலங்களை மறைத்து அதனை ''இரண்டு உலகங்களின் சந்திப்பு'' என்றும் ஸ்பானியாவும், லத்தீன் அமெரிக்க அரசுகளும் செய்யும் பிரசாரங்களையும் தாண்டி செவ்விந்தியர்களின் 2492ஆம ஆண்டை நோக்கிய நீண்ட போராட்டம ஆரம்பித்துவிட்டது. அடுத்த 500 ஆண்டுகளிலாவது உலக தேசிய இனங்களின விடுதலைப்போராட்டங்களும் உண்மையான மனித நேயமும் வெல்லட்டும்.

## ஆணையாளர்

பட்டிருக்கும் தொகையையே அங்கீகரித்த வரித்தொகையாகச் சிலர் தவறாகக் கருதி உள்ளார்கள். உண்மையில் அவர்கள் வரியாகக் கருதுவது ஆதனத்தின் வருடாந்தப் பெறுமதியையே இந்நிலையில் அத்தொகையின் 18 வீதம் மட்டுமே வருடாந்த வரியாகும். அதிலும் காலாண்டுக்கு அதன் 1/4 பங்கினையே செலுத்த வேண்டும். மேலும் 31-03 93 க்கு முன்னர் செலுத்துபவர்களுக்கு இதில் 10வீதம் கழிவும் வழங்கப்படுகின்றது.

**மதிப்பீடு அதிகமானது என்று கூறும் வரியிறுப்பாளர்களுக்கு சட்டரீதியான நிவாரணம் யாது?**

சட்டரீதியான அறிவித்தல் கிடைத்து 30 நாட்களுக்குள் வரிமதிப்பு சம்பந்தமான மாநகர ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்ய வரியிறுப்பாளர்களுக்கு சட்டரீதியான உரிமையுள்ளது. இவ்வாறாக கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் அரச விலைமதிப்பாளர் முன்னிலையில் தனித்தனியாக பரிசீலனை செய்யப்பட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வேற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு236 இன் கீழ் வரியிறுப்பாளர்களின் உரிமையை நிலைநாட்ட முடியாமை பற்றியகருத்தை கேட்டபோது;**

இந்நிலை மேன்முறையீடு தொடர்பான விசாரணையின் பின்னர் எழுவதொன்றாகும். விசாரணையில் வரியிறுப்பாளர் திருப்தியடையும் பட்சத்தில் இந்நிலை எழாது என்றார்.

## குத்துக்கரணம்

மாக உழைத்ததாகவும் பொழுதையும், பொருளையும் செலவிட்டதாகவும் கூறிக்கொள்ளும் இத்தகைய ஐரோப்பிய - அமெரிக்க வாசிகள் தமிழ்மக்கள் சிந்திய - சிந்திக்கொண்டிருக்கும் கண்ணீரையும், வியர்வையையும் இரத்தத்தையும் இனிமேலாயினும் தமது அந்தஸ்துகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது வரவேற்பிற்குரியது.

— இளையவன்

## தமிழ் மொழியும் தமிழனும்

இந்தியாவில் ஏறத்தாழ 1652 மொழிகள் பேசப்படுகின்றன. இதில் மிகவும் பழைமையானது ''தமிழ்'' மொழியே தான்.

கடலிலே முதன் முதலில் சென்றவன் ''தமிழன்'' என்பது அமெரிக்க நாட்டைச் சார்ந்த டாக்டர் ''சிரில்க் ரோம்நிக்'' என்ற அறிஞரினால் ஆதார பூர்வமாக நிருபிக்கப்பட்டுள்ளது.

# செவ்விந்திய நாகரிகம் அழிக்கப்பட்டது எப்படி?

## கொலம்பஸ் புரிந்த இனப் படுகொலை

**12** அக்டோபர் 1492ஆம் நாள் கிறிஸ்தோபர் கொலம்பஸ் அமெரிக்கக் கண்டத்தின் பகாமாஸ் தீவுகளிலொன்றில் தனது காலடிகளை முதன்முதலில் பதித்த நாள். கொலம்பசின் வரவு அமெரிக்காவின் செவ்விந்திய மக்களுக்கு நாகரிகத்தையும், முன்னேற்றத்தையும் பெற்றுத் தந்ததாக ஐரோப்பிய காலனித்துவவாதிகளால் பிரசாரம் செய்யப்படும் அதேவேளை, இந்நாளை மனிதகுல வரலாறு சந்தித்த மிகப்பெரிய இனப் படுகொலையையும், அடிமை வியாபாரத்தையும், சுரண்டலையும் தொடக்கிவைத்த நாளாகவே பூர்வீக செவ்விந்தியர்களின் வரலாறு காட்டி நிற்கின்றது.

1492ஆம் ஆண்டு ஸ்பானிய நாட்டின் மகாராணி இசபெல்லாவின் உதவியுடன் கொலம்பசால் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இக் ''கண்டுபிடிப்பின்'' 500 வருட பூர்த்தியை ஸ்பானியாவும், லத்தீன் அமெரிக்காவின் சில அரசுகளும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகின்றன. ஸ்பானியா நாட்டு அரசால் பல வருடங்களாகத் திட்டமிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட எக்ஸ்போ' 92 (EXPO'92) ஸ்பானியாவில் உள்ள செவில்லா (Sevilla) என்ற இடத்தில் கொலம்பஸ் அமெரிக்காவில் கால்பதித்த அக்டோபர் 12ஆம் திகதி முடிவடைந்தது. பிரபல்யம்மிக்க இவ் உலகக் கண்காட்சியும், கடந்த வருடம் நடந்துமுடிந்த உலக ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப நாள் நிகழ்ச்சிகளும் ஸ்பானியாவின் காலனித்துவம் அமெரிக்காவில் கால்பதித்த 500ஆவது வருடநிறைவின் ''சிறப்புக்களை'' நன்றாகவே எதிரொலித்தன.

முடியாட்சி, நாகரிகம், கிறிஸ்துவம் என்பவற்றின் பெயரால் ஸ்பானிய, போத்துக்கேய அரசுகள் ஏற்படுத்திய காலனித்துவத்தின் வடுக்கள் லத்தீன் அமெரிக்க பூர்வீக மக்களை இன்றும் தொடர்ந்துவரும் அதேநேரம், இவ்ஆக்கிரமிப்பின் 500 வருட நிறைவை ஸ்பானிய அரசு ''இரண்டு உலகங்களின் சந்திப்பு'' என்ற குறியீட்டுப் பெயருடன் நடத்தியது. இந்நிலையில் இவ் ''இரண்டு உலகங்களின் சந்திப்பு'' ஏற்பட்டதற்கான சூழ்நிலைகளையும், அது ஏற்படுத்திய தாக்கங்களையும் சிறிது விரிவாகப் பார்ப்போம்.

### ஐரோப்பாவின் அதிகார யுத்தமும் கொலம்பசின் பயணமும்

ஐரோப்பாவின் பலம்வாய்ந்த நாடுகளாய் விளங்கிய பிரித்தானியா, இத்தாலி, போத்துக்கல், ஸ்பானியா, ஒல்லாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கிடையே பல நூற்றாண்டுகளாகவே அரசியல, சமய தலைமைத்துவத்திற்காக கடும் யுத்தமும், பகைமையும் இடம்பெற்று வந்தது. இந்நாடுகளின் செல்வங்கள் இப்போர்களின் பொருட்டு பெருமளவில் அழிக்கப்பட்டு வந்ததால் 14ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமது அதிகாரத்தையும், செல்வத்தையும் கட்டிக்காப்பதற்கு ஐரோப்பாவிற்கு வெளியில் வளங்களைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது

12ஆம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ தூரகிழக்கு நாடுகளுக்கு மேற்கொண்ட பயணங்கள் பற்றிய கதைகளும், அந்நாடுகளின் செல்வச் செழிப்பு குறித்து மார்க்கோபோலோ எழுதியிருந்த குறிப்புக்களும் ஐரோப்பியர்க்கு இத்தூரகிழக்கு நாடுகளின் மீது ஆர்வத்தைத் தூண்டின. இக்காலத்தில் துருக்கிய பேரரசின் எழுச்சி ஆபிரிக்காவூடாக ஆசியாவை அடைவதற்கான தரைவழிப் பயணத்திற்கு தடையாக இருந்ததால் இப்புதிய உலகிற்கான கடல்வழிப்பாதையைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவையும் போட்டியும் ஐரோப்பியர் மத்தியில் எழுந்தது.

இத்தகைய சூழ்நிலையே துணிகரத்தில் நாட்டம்கொண்ட கொலம்பசின் மேற்குக் கடல்வழிப் பாதையூடாக இந்தியாவை அடையும் திட்டத்திற்கு உதவிட ஸ்பானிய நாட்டு மகாராணி இசபெல்லாவைத் தூண்டியது என சரித்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு மிகுந்த ஆட்பலத்துடன் மூன்று கப்பல்களில் பயணத்தைத் துவக்கிய கொலம்பஸ் 1492 அக்டோபர் 12ஆம் திகதி அமெரிக்காவின் பகாமாஸ் தீவுகளை இந்தியா என நம்பி தரையிறங்கினான். (போத்துக்கலைச் சேர்ந்த வாஸ்கோடகாமா 1497ஆம் ஆண்டில் நன்னம்பிக்கை முனையூடாக இந்தியாவை அடைந்த பின்னரும் கூட தான் தரையிறங்கியது இந்தியாவென்றே கொலம்பஸ் தனது மரணம்வரை நம்பியிருந்தான்).

### அமெரிக்காவில் ஐரோப்பிய காலனித்துவம்

தற்போதைய ஸ்பானிய அரசின் மொழியில் இவ் 'இரண்டு உலகங்களின் சந்திப்பு'' மனித குல வரலாற்றின் மிகப்பெரிய இனப்படுகொலையையே நடாத்தி முடித்தது. இவர்கள் கால்பதித்த நாடுகள் எங்கும் இலட்சக்கணக்கான பூர்வீகக் குடிகள் அழிக்கப்பட்டனர். இப்படுகொலைகளையும், ஆக்கிரமிப்பையும் ஆரம்பத்தில் எதிர்த்த செவ்விந்தியர்கள் ஐரோப்பியரின் நவீன ஆயுதங்களுக்கு இரையானார்கள். தற்போதைய கியூபாவில் செவ்விந்திய சமூகமே முற்றாக அழிக்கப்பட்டதற்கு இச் சண்டைகளே காரணமாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறான சண்டைகளில் தப்பியோர் பின்னர் அடிமைகளாக்கப்பட்டு ஐரோப்பியரின் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் சித்திரவதைக்குள்ளாகி இறந்தார்கள். தற்போதைய பொலிவியாவின் பொடோசி (Potosi) என்ற இடத்தில் மட்டும் 8 மில்லியன் அடிமைகள் தங்கச் சுரங்கங்களில் சித்திரவதைக்குள்ளாகி இறந்தார்கள் என கருதப்படுகிறது. தமது வாழ்விடங்களை விட்டுத் துரத்தப்பட்டோர் காடுகளில் பட்டினியால் மடிந்தனர். தவிர ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியான புதிய நோய்களும் பெருமளவு செவ்விந்தியர்களைப் பலிகொண்டதாகச் சொல்லப்படுகின்றது. மொத்தத்தில் 15 ஆம் நூற்றாண்டில் கொலம்பஸ் கால்பதிக்கும் போது ஏறக்குறைய 100 மில்லியனாக இருந்த செவ்விந்தியர்களின் குடித்தொகை ஏறக்குறைய 100 வருடங்களில் 10 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. (கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 90 மில்லியன் என்பது இதன் அர்த்தமல்ல. 100 வருடங்களுக்கு இடையில் ஏற்படும் குடித்தொகையின் இயல்பான வளர்ச்சியிலிருந்தே இத்தொகை கணிக்கப்பட வேண்டும்).

இவ்வாறு 7 தலைமுறைகளுக்கிடையில் ஏற்பட்ட செவ்விந்தியர்களின் சனத்தொகை வீழ்ச்சி, ஆபிரிக்க மக்களின் வாழ்வையும் அவலத்துக்குள்ளாக்கியது. தமது தோட்டங்களிலும் சுரங்கங்களிலும் உழைப்பதற்கு ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளைக் கொண்டு வரும் திட்டம் 1518 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இக் காலப்பகுதியில் ஆபிரிக்காவின் மேற்குக்கரைகளில் தற்போதைய செனிகலிலிருந்து அங்கோலாவரை கப்பல்கள் வந்துபோவதற்கு ஏதுவாக பல துறைமுகங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அடிமைவியாபாரம் வேகமடைந்தது. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஏறக்குறைய 20 மில்லியன் வரையான கறுப்பு அடிமைகள் இவ்வாறு அமெரிக்காவிற்குக் கொண்டுவரப்பட்டதாக நம்பப்படுகின்றது. தவிர அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட போது ஏற்பட்ட எதிர்ப்பில் கொல்லப்பட்டவர்களும், கப்பலில் கொண்டுவரப்பட்ட போது நீண்ட கடல் வழியில் இறந்தவர்களும் இதைவிட இரண்டு மடங்காக இருக்கலாம் என்றே சரித்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஐரோப்பியர்களின் இவ் ஆக்கிரமிப்புகளுக்கு பொன், வெள்ளிகளைக் கைப்பற்றுதல், கிறிஸ்துவத்தைப் பரப்புதல், ஐரோப்பாவில் தமது புகழைக் கட்டிக்காத்தல் என்பனவே அடிப்படையான நோக்கங்களாகும் இவ்வகையில் ஐரோப்பியர்களால் கைப்பற்றப்பட்ட உலோகங்களின் தொகை இதுவரை சரியாகக் கணிக்கப்படவில்லையென்றும் ஐரோப்பாவில் கைத்தொழில் துறை வேகமாக வளர்ச்சி கண்டதற்கு அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட வளங்களே மூலகாரணம் என நம்பலாம்.

மேற்குலகின் தகவல் தொடர்பு சாதனங்களும், திரைப்படங்களும் செவ்விந்தியர்களை அம்பு வில்லுடன் அமைகின்ற காட்டுமிராண்டிகளாக மிகைப்படுத்தி கொலம்பஸ் கால்பதித்த பின்னரே இவர்கள் நாகரிகத்தைக் கற்றுக்கொண்டதாக பிரசாரப்படுத்தும் அதேவேளை, செவ்விந்தியர்களை செழிப்பான இருவேறுபட்ட நாகரிகங்களின் வழித்தோன்றல்களாகவே வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றார்கள். தற்போதைய பெரு ஈக்குவடோர், பொலீவியா போன்ற பிரதேசங்களிலிருந்தோர் அன்டின் (Andin) நாகரிகத்தினதும் தற்போதைய மெக்சிக்கோ, குவாத்தமாலா, பெலீஸ், எல்சல்வடோர் நிக்கரகுவா போன்ற பிரதேசங்களிலிருந்தோர் மெசோ அமெரிக்க மாயா (Maya) கலாசாரம் உள்ளிட்ட நாகரிகத்தினதும் தோன்றல்களாக கருதப்படுகிறார்கள். இவர்கள் மத்தியில் கி.மு 6000—7000 ஆண்டளவில் கட்டப்பட்ட பிரமிட்டுகளும், நீர்த்தேக்க வடிகால் முறைகளும், நிலையான குடியிருப்புக்களும் இருந்ததை புதைபொருள் ஆய்வுகள் நிறுவியுள்ளன. தவிர மெசோ அமெரிக்க வழித்தோன்றல்களுக்கிடையியே காலத்தை அளவிடும் 260 நாட்களை கொண்ட கலண்டர் முறையும், எழுத்துக் கலையும் காணப்பட்டுள்ளது. இவ் எழுத்து முறையிலான பல ஆயிரம் சுவடிகள் ஸ்பானிய காலனித்துவாதிகளால் எரித்து நாசமாக்கப்பட்ட பின்பும், பல சுவடிகள் இன்றும் புதைபொருள் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் செவ்விந்தியர் மத்தியில் பல வகையான மொழி வழக்குகள் இருந்ததும் தற்போது அறியப்பட்டுள்ளது.

இவ்வாறாக, ஐரோப்பிய காலனித்துவம் அமெரிக்காவில் மேற்கொண்ட இனப்படுகொலை, அடிமை வியாபாரம், பொருளாதார சுரண்டல் என்பவற்றிற்கு மேலாக செவ்விந்திய மக்களின் செழிப்பான நாகரிகத்தையும், கலாசாரத்தையும் கூட படுகொலை புரிந்துள்ளது.

### செவ்விந்தியர்கள்–இன்றைய நிலை

ஸ்பானிய காலனித்துவம் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்னர் பெரும்பாலான (லத்தின்) அமெரிக்க நாடுகளில் முடிவுக்கு வந்தபோதும் அரசியல் அதிகாரங்களும், நிலவுரிமைகளும் அமெரிக்க நாடுகளிலேயே தங்கிய ஐரோப்பிய வெள்ளை உயர் குடியினரிடமே சென்றது. காலனித்துவத்தின் முடிவு பூர்வீக செவ்விந்திய மக்களுக்கு எவ்வித அரசியல், பொருளாதார விடுதலையும் பெற்றுத்தரவில்லை. மாறாக இன்றும் செவ்விந்திய மெஸ்ரீச (செவ்விந்திய, வெள்ளையர் கலப்பினமக்கள்) கறுப்பின மக்களை வறுமை, எழுத்தறிவின்மை, சுரண்டல், சுற்றாடல் அழிவு என்ற ரீதியில் தொடர்ந்தும் தீண்டி வருகின்றது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் இன்று ஏறக்குறைய 30 மில்லியன் செவ்விந்தியர்கள் வாழ்கின்றார்கள். குவாத்தமாலா, பொலீவியா போன்ற நாடுகளில் இவர்கள் பெரும்பான்மையினராகவும், பெரு, எக்வடோர் போன்ற நாடுகளில் 38 வீதமானவர்களும் மற்றைய நாடுகளில் மிகச் சிறுபான்மையினராகவும் காணப்படுகின்றனர். அரசியல், நில உரிமைகளைக் கொண்டிருக்கும் வெள்ளை உயர் குடியினரின் கொடிய வன்முறைக்கும், பழிவாங்கலிற்கும் முகம் கொடுத்து வரும் இவர்களைப் பொறுத்தவரை காலனித்துவம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. கடந்த 30 வருடங்களில் மட்டும் பெரு, குவாத்தமாலா, பிரேசில், பரகுவே போன்ற நாடுகளில் 250,000 வரையான செவ்விந்திய மக்கள் அரசியல் வன்முறைக்குப்பலியாகியுள்ளனர். பல நாடுகளில்செவ்விந்தியர்களின் இன, மொழி, கலாசார நடவடிக்கைகள் கூட தடைசெய்யப்பட்டுள்ளன.

இந்த அடக்கு முறைகளுக்கும், வன்முறைக்கும் மத்தியில் நிலவுரிமை அரசியல் சுதந்திரம், கலாசார வாழ்வு என்பவற்றிற்கான செவ்விந்தியர்களின் போராட்டம் வெவ்வேறு வடிவங்களில் ஆங்காங்கே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது நிக்கரகுவாவில் உள்ள 'மிஸ்கிற்றோ' இன செவ்விந்தியர்கள் சாண்டினிஸ்டுகளுடனான 5 வருட ஆயுத எதிர்ப்பின் பின் ஓரளவுதன்னாட்சி உரிமை பெற்றிருக்கின்றார்கள். 'பெரு' நாட்டில் அறுபதுகளில் ஏற்பட்ட செவ்விந்தியர்களின்

**காண்டீபன்**

ஆயுத எதிர்ப்பியக்கம் பலத்த அழிவினை எதிர்கொண்டபோதும். தற்போதைய The Shining Path, Tupac, Amaru ஆகிய அமைப்புக்கள் தலைமையிலான ஆயுத எதிர்ப்பியக்கம் செவ்விந்திய மக்களின் பலத்த ஆதரவைப் பெற்றுள்ளதுடன் பலபகுதிகளை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துள்ளது.

இவைதவிர அமைதிவழி எதிர்ப்பியக்கங்களும் மக்களின் பலத்த ஆதரவைப் பெற்று வருகின்றன. ஈக்குவடோரில் 1989இல் செவ்விந்தியர் நடத்திய அமைதிவழிப் போராட்டங்களின் பின்னர் அரசாங்கம் செவ்விந்தியர்களுக்கு சில சலுகைகளை வழங்கிய போதும் பிரதேச உரிமைக்கான போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. வெனிசூலா, கொலம்பியா, பிரேசில், சிலி போன்ற நாடுகளிலும் செவ்விந்தியர்களின் உரிமைப் போராட்டம் எழுச்சி பெற்று வருகின்றது.

கொலம்பசையும், ஐரோப்பிய காலனித்துவத்தையுமே செவ்விந்திய மக்கள் தங்கள் 500 வருட அவல வாழ்விற்கு காரணிகளாகக் கருதுகின்றார்கள். இந்நிலையில் 1992 ஆம் ஆண்டு செவ்விந்தியர்க்கு ஒரு திருப்புமுனையாக அமையும் என கருதப்படுகின்றது. பல்வேறுபட்ட செவ்விந்திய அமைப்புகள் ஒன்றிணைந்து ''500 வருட எதிர்ப்பு'' என்ற பெயரில் மாபெரும் எதிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆணையாளர் வரி உயர்த்த அதிகாரம் பெற்றவர் அல்லர்

## - வரியிறுப்பாளர் சங்கத் தலைவர்

யாழ்ப்பாணம் மாநகர சபை வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் வழக்கறிஞர் நாகராஜா மாநகர சபையில் வரிமதிப்பு அறிவித்தல் தொடர்பாகப் பின்வருமாறு கூறுகிறார்.-

“சட்டத்தின் பிரகாரம் வரி மதிப்புச் செய்வதற்கும், அவ்வரி மதிப்பை மீளாய்வு செய்வதற்கும் மாநகரசபைக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அவ் அதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்படும் சபைக்கு மட்டும்தான் உள்ளது. சபையைக் கலைக்கும் காலத்தில் அவ்வதிகாரம் விசேட ஆணையாளருக்கு வழங்கப்படலாம். உண்மையில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை இயங்காத பொழுது சட்டத்துக்கு அமைய அமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, மாநகர நிர்வாகத்தில் சூனியம் நிலவுகின்றது.

1982 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட சபை செயற்படவில்லை. அதேநேரம், அந்தச்சபை கலைக்கப்படவும் இல்லை ஒருசபை கலைக்கப்படும் பட்சத்தில்தான் விசேட ஆணையாளர் நியமிக்கப்படுவார். எமது மா. ந. சபைக்கு விசேட ஆணையாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. இன்று மாநகர ஆணையாளர் தனக்கு உரிய சாதாரண அதிகாரத்துடன் மட்டுமே சபையின் நிர்வாகத்தைக்கொண்டு நடத்துகிறார் ஆகவே ஆதன வரியை உயர்த்துவதற்கு ஆணையாளருக்கு எந்தவிதமான சட்டபூர்வமான உரித்தும்கிடையாது” என்று கூறுகிறார் சி. நாகராஜா.

‘மேலும், கடந்த பல வருடங்களாக மா ந.ச வரியிறுப்பாளர்களுக்கு ஆற்றவேண்டிய அடிப்படை சேவைகள் வழங்காத நிலை இருக்கிறது. மின்சார விநியோகம் நீர் விநியோகம்,வீதிகளைப் பராமரித்தல், சூழல் பாதுகாப்பு சுகாதாரம் போன்ற சேவைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. கண்கூடாக நடத்தப்பட்ட சேவை மண்ணைக் காசாக்கியதும், காசைமண்ணாக்கியதும்தான். மனிதநேய அடிப்படையில் பார்க்கும் போது இந்த வரி உயர்வு ஏற்றுக்கொள்ள முடியாது” என்றுகூறும் அவர் -

“நாட்டில் நிலவும் போர்க்காலச்சூழ் நிலையும், மக்கள் படும் துன்பங்கள், கஷ்டங்களிலும் நகரின் ஒரு சிறுபகுதி மட்டுமே பாதுகாப்புப் பகுதியாக இருக்கப் பெரும் பகுதி குண்டு வீச்சுக்கும், எறிகணைத் தாக்குதலுக்கும் இலக்காகியிருக்கும் வேளையில் ஆதனங்களின் மதிப்பு உயர்ந்து விட்டது என்று சொல்லமுடியாது” என்கிறார்.

“நகரத்தின் பல பாகங்களிலும் கடைக் கட்டடங்கள், வீடுகள், குடிமனைகள் சேதமுற்றும், சிதைந்தும் இருக்கின்றன. பொருளாதாரத்தடை காரணமாக பொருள்கள் பெற முடியாத நிலை காரணமாகத் திருத்த வேலைகளோ, பராமரிப்பு வேலைகளோ செய்ய முடியாத நிலை இருக்கிறது. அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வாலும், தட்டுப்பாட்டின் காரணமாகவும் மக்கள் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். தமது வழமையான கைத்தொழில்களை நடத்த முடியாத நிலையில்-வருவாய் குன்றிய நிலையில் இருக்கிறார்கள். இந்நிலையில் மக்களின் துன்பங்களைப் பற்றி எவ்வித சிந்தனையும் இன்றி வரியிறுப்பாளர்களுடன் ஆலோசனை கலக்காமல் தன்னிச்சையாக ஆணையாளர் ஆதன வரியை மூன்று நான்கு மடங்குகளாக உயர்த்தியமை கண்டனத்துக்குரிய செயலாகும். இது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததற்கு ஒப்பான செயலாகும்” என்று வேதனையாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் நம்மிடம்:

“மக்களுக்காக மாநகர சபையே அல்லாமல் மாநகர சபைக்காக மக்கள் இல்லை என்பதை ஆணையாளர் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்படியாக வரியை உயர்த்துவதற்கு ஏதாவது நிர்ப்பந்தம் இருந்ததென்று சாக்குப்போக்குச் சொல்ல முடியாது. இன்று ஆணையாளர் ஒரு காபந்து நிர்வாகி மாதிரியே இயங்குகிறார். அவர் மாநகர சபையின் அன்றாட அலுவல்கள் மாத்திரம் நிறைவேற்ற வேண்டியவராவர். மக்கள் சபை ஆற்ற வேண்டிய சேவைகளை அலுவலராக உள்ளவர் ஆற்ற முடியாது -

“பாரிய வேலைத் திட்டம் எதுவும் ஆணையாளர் மேற்கொள்ள முடியாது. இந்நிலையில் வரி விதிப்பு உயர்வு தவிர்க்க முடியாததென்று என்று ஆணையாளர் வாதிடுவது பொருத்தமற்றது. 1974 க்கும் பிறகு 1983 வரை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை வரியை அதிகரிக்க வேண்டும் என்று கருதவில்லை. 1983 முதல் 1989 வரை சபையை நிர்வகித்த மாநகர ஆணையாளர் வரியை உயர்த்தவில்லை. மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் வரி அதிகரிக்கப்பட வேண்டிய தேவையும் எழவில்லை.-

“மாநகர நிர்வாகத்தில் அநாவசிய செலவுகள் செய்யப்படுகின்றன என்பது தெளிவு. மாநகர சபைக்கட்டடத் தொகுதியிலேயே போதிய இடவசதி உள்ள போது, மாதம் 2000 ரூபா வாடகை கொடுத்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிறிதொரு இடத்தில் இயங்க வேண்டிய நிலை உள்ளது. மேலதிக வேலைக் கொடுப்பனவுகள், போக்குவரத்துப் படிகள் தேவைக்கு அதிகமான ஊழியர்களை வேலைக்கு அமர்த்தல் மூலமாகிய பண விரயம செய்யப்படுகின்றது.” இவ்வாறு கூறினார்.-

இந்த நிலையில் ஆதனவரி மதிப்புக்கு எதிராக ஆட்சேபனையைத் தெரிவிக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தில் ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று கேட்டபோது -

“மாவட்டநீதிமன்று யாழ்ப்பாணத்தில் இயங்காத ஒரு நிலையில் சட்டரீதியான நிவாரணங்களைப் பெற முடியாது இருக்கின்றது. வரி மதிப்பு அறிவித்தல் கிடைத்ததும் அதனை ஆட்சேபிப்பதற்கு வரியிறுப்பாளருக்குச் சட்டபூர்வமான உரிமை உண்டு மாநகர சபைக் கட்டளைச் சட்டம் 235 -ஆம் பிரிவு இதற்கு வழி செய்கின்றது. ஆட்சேபனையை சபை விசாரணை செய்து வழங்கும் முடிவுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் 236 ஆம் பிரிவின் கீழ் வழக்குத் தொடர ஒவ்வொரு வரி இறுப்பாளருக்கும் உரித்துண்டு. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அந்த உரித்தை எந்த ஒரு வரியிறுப்பாளரும் பிரயோகிக்க முடியாது என்பதை ஆணையாளர் நன்கறிவார்.

“மேலும் 1949 ஆம் ஆண்டில் இருந்து மாநகர சபை அமைக்கப்பட்ட காலம் முதல் வரி இறுப்பாளர் சங்கம் இயங்கி வந்துள்ளது 1974 இல் ஆதன வரி உயர்த்தப்பட்டபோது, அதை எதிர்த்து எமது சங்கம் யாழ் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடுத்தது பின்னர் அது மேன்முறையீடு மன்றிலும் வாதாடி தனது சட்டபூர்வ நிலையை நிலைநாட்டி மாவட்டநீதிமன்றில் மீள் விசாரணைக் கட்டளையையும் பெற்றது. மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சபை பதவியில் இல்லாத இவ்வேளையில் வரியிறுப்பாளர்களைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய, அவர்கள் சார்பில் குரல் எழுப்பக் கூடிய ஒரு சங்கமாக எமது சபை அமைகிறது” என்றார் அவர்.

> ஆணையாளர் ஒரு காபந்து நிர்வாகி மாதிரியே இயங்குகிறார். மக்கள் சபை ஆற்ற வேண்டிய சேவைகளை அலுவலராக உள்ளவர் ஆற்ற முடியாது என்று கூறுகிறார் வரியிறுப்பாளர் சங்கத் தலைவர்.
>
> ★ ★
>
> போர்க்கால சூழ்நிலையில் எமது கடமைகளும் பொறுப்புகளும் அதிகரிக்கின்றன. சீர்குலைந்திருக்கும் அடிப்படை வசதிகள் போன்றவற்றினால் சபைக்குரித்தான உயிர்காக்கும் உயர்ந்த பணிகளைச்செய்வதற்குரிய செலவு அதிகரித்திருக்கின்றது. இந்நிலையில் வரி மீள் மதிப்பினை அமுல்படுத்தல் தவிர்க்க முடியாததாகின்றது என்கிறார் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர்.

# “போர்க்காலச் சூழ்நிலையில் பொறுப்புக்கள் அதிகரிக்கின்றன”

## - ஆணையாளர்

யாழ். மாநகர சபை ஆதன வரி மீள் மதிப்பீடு தொடர்பாக மாநகர ஆணையாளர் வே.பொ பாலசிங்கத்திடம் கேட்ட போது, அவர் எம்மிடம்-

உள்ளூராட்சி மன்றமொன்று அரசாங்கத் திணைக்களம் போலல்லாமல் தனது சேவைகளை வழங்குவதற்கான நிதி மூலத்தின் பெரும் பகுதியை உள்ளூர் வரிகளிலிருந்தே பெற்றுக் கொள்ளுகின்றது. அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நன்கொடை இச் செலவின் ஒரு பகுதியையே ஈடுசெய்கின்றது. உள்ளூராட்சி மன்றங்களினால் விதிக்கக் கூடிய வரிகளில் ஆதனங்களின் மீதான சோலைவரியே முக்கிய பங்கினை வகிக்கின்றது. அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டவாக்கங்களுக்கு அமைவாக ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஆதனங்களின் மதிப்பீட்டினை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின மூலம் மீள் மதிப்பீடு செய்கின்ற கடப்பாடு உள்ளூராட்சிமன்றத்திற்குரியதொன்றாகும் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாண மாநகரசபை 1974 ஆம் ஆண்டின் பின் இந் நடவடிக்கையைமேற்கொள்ளவில்லை. 1983 ஆம் ஆண்டில் நிர்வாகத்திற்கு பொறுப்பாகவிருந்த சபையானதுமீள்மதிப்பீடு செய்வதற்கான தீர்மானத்தினை மேற்கொண்டு அமைச்சரின் அனுமதியைப் பெற்றபோதிலும் மிக மெதுவாகவே தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கை தற்போது தான் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

எமது பொறுப்பு

1983ஆம் ஆண்டு நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவிருந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையானது யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களை மீள விலைமதிப்பதற்கான தீர்மானத்தை எடுத்து அமைச்சரின் அனுமதியைப் பெற்றிருந்தது அதன் பிரகாரம் 1989 இல் அரச விலைமதிப்புத் திணைக்களத்தினால் மீள்விலைமதிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1992 இறுதிப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டது. இதனை செயற்படுத்துவது எமது கடமையாகும். ஒரு வேளை அவ்வாறான தீர்மானம் சபையினால் மேற்கொள்ளப்படாமலிருந்தாலும்கூட குறுகிய

## பேட்டி: மதன்

காலப்பகுதிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லாதிருக்கும் நிலையில் அவர்களின பொறுப்பை சட்டரீதியாக ஏற்றிருக்கின்ற ஆணையாளர் அவ்வாறு மீள் மதிப்பீடு செய்வதனை பொருத்தமற்றதென்று கொளளலாம் ஆயினும் ஏறக்குறைய 10வருடங்களுக்கு மேலாகப் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் ஆணையாளர் இதனைச் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றார் அல்லவா?

வருடாந்தப் பெறுமதி அதிகமாவது ஏன்?

இறுதியாக சோலைவரியின் பொருட்டான ஆதனங்களின் மதிப்பீடு 1974 இல் செய்யப்பட்டது. 5வருடங்களுக்கொரு முறை மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய ஒழுங்குமுறைஇருந்தும் அதனைச் செயற்படுத்தாமையினால் 15 வருடங்களின்பின்னர்செய்யப்பட்ட இம் மதிப்பீட்டில் கணிசமானஅதிகரிப்பு ஏற்பட்டிருப்பது இயல்பானதே. மாறாக, 5வருடங்களுக்கு ஒருமுறை என்ற ஒழுங்கில்மூன்றுதடவைகள்மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்குமானால் மதிப்பீடு அதிகமானது என்ற உணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கமாட்டாது. 1974 தொடக்கம் 1989வரையான 15 வருட காலப்பகுதிக்குள் பொருள்கள் சேவைகளின் விலையேற்றம் 10 மடங்கிற்கு மேலாக அதிகரித்துள்ள போது பணப்பெறுமதியின் அடிப்படையில் 1974 மதிப்பீட்டின் பிரகாரமான வரித்தொகையைக் கொண்டு தற்போதைய விலை வீக்க நிலையில் சேவைகளைச் செய்ய முடியாது சபை நிதிநெருக்கடியால் திணறுகின்றது. குறிப்பாக, சபையின் பொறுப்புக்கள் (செல்மதிகள்) அதிகரித்திருக்கின்றன, உதாரணமாக விசேட ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பல ஊழியர்கள் இளைப்பாறியதன் காரணமாக இவர்களுக்கான ஓய்வூதியக் கட்டுப் பணம்பதினைந்து மில்லியன் ரூபாவரையில் நிலுவையாகத் திரண்டுள்ளது.

போர்க்காலச் சூழ்நிலையில் மீள் மதிப்பீட்டினை ஏன் அமுல் செய்கின்றீர்கள்?

போர்க்காலச் சூழ்நிலையில் எமது கடமைகளும பொறுப்புக்களும் அதிகரிக்கின்றன, இவ்வாறான சூழ்நிலையில் போரினால் ஏற்படுகின்ற அழிவை விட தோற்றுவிக்கப்படுகின்ற ஆரோக்கியமற்ற சூழ்நிலை-சுகாதார சீர்குலைவு இடம் பெயர்ந்தோர் பிரச்சினைகள் பரவும் நோய்கள், கட்டாக் காலி நாய்கள், சீர்குலைந்திருக்கும் அடிப்படை வசதிகள் போன்றவற்றினால் சபைக்குரித்தான உயிர்காக்கும் உயர்ந்த பணிகளைச் செய்வதற்குரிய செலவு அதிகரிக்கின்றது இந்நிலையில் வரி மீள் மதிப்பினை அமுல் செய்தல் தவிர்க்க முடியாததாகின்றது.

குற்றச்சாட்டுக்கான பதில்

முக்கியமான சேவைகள் பல கடந்த காலங்களை விட தற்போது மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்று சொல்லலாம். குறிப்பாக முற்றாக ஸ்தம்பித்திருந்த குடிநீர் வழங்கல் சேவை தடங்கலின்றி ஏறக்குறைய 30 ஆயிரம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது இவ் வருட இறுதிக்குள் மேலும் 30 ஆயிரம் பேருக்கு இக்குடிநீர் சேவை வழங்கப்படவுள்ளது. வானுயர்ந்த கட்டடங்களும், மேலும் கூழும் வாகனங்கள் ஓடுவதும் சேவை எனக் கருதும்நிலையிலிருந்து நாம் விலகிச் செல்லவேண்டும்.

வருடாந்தபெறுமதியும் வீத வரியும்

வரி மீள்மதிப்பீட்டுக்கு எதிராக சில செய்திகள் மற்றும் அறிவித்தல்கள் வெளி வந்த காரணத்தினால் எம்மால் விநியோகிக்கப்பட்ட ஆதன வரி அறிவித்தலின் மதியில் ஆதனத்தின் வருடாந்தப் பெறுமதியாகக் குறிப்பிடப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பொஸ்டன் தில்லையம்பலத்தின்

# குத்துக்கரணம்

''தமிழீழ சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டது. சிறிலங்காவுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாக அறிவிப்பு - தில்லையம்பலம் சிறீகாந்தன் தலைமையில் உறுதியேற்பு'' இது 1982 ஜனவரி 24, சுதந்திரன் இதழின் முன்பக்க தலையங்கச் செய்தி.

''பொஸ்டன் தமிழமைப்பு தமிழீழக் கோரிக்கையை கை விட்டது மாறிவரும் சூழலுக்கு ஏற்ப சிந்திக்க வேண்டும் எனவும் தெரிவிப்பு. பொஸ்டனிலிருந்து தில்லையம்பலம் அறிவிப்பு'' இது 1993-மார்ச் 24-ம் திகதிய தினகரனின் முன்பக்க தலையங்கச் செய்தி.

தமிழீழம் என்னும் தனியரசாகும் தேசத்தை பிரகடனம் செய்யவும், பதினொரு ஆண்டுகளின் பின் அப்பிரகடனத்தை கைவிடவும் பொஸ்டன் தமிழர்களுக்கு இருக்கும் தார்மீக உரிமை என்ன? இது ஒருபுறம் இருக்கட்டும்.

வெளிநாடுகளில் இருக்கும் ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையானோர், புலிகளின் தலைமையிலான தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு உந்து சக்தியாகவும், உறுதுணையாகவும் இருந்து வருகின்றனர் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. எனினும் தான் தோன்றித்தனமாக முளைவிடும் சிலர் அவ்வப்போது தமக்குத்தாமே மகுடம் சூடிக் கொள்ளும் வகையில் அறிக்கை வெளியிடுவதும் புதுமையானதல்ல.

சிறிலங்கா அணியினரின் துடுப்பாட்டத்தை மைதானத்தில் குழப்பம் விளைவித்ததன் மூலம் தடுத்ததாக லண்டனில் பிரபல்யம் பெற்ற யோகேசுவரன், ஐ. நா. புகழ் வைகுந்தவாசன், ''தமிழீழ அரசு அமைப்பதற்காக'' சில மாநாடுகளை நியூயோர்க்கில் நடத்திய பொஸ்டன் தமிழர்கள் லண்டனிலிருந்து இறக்குமதியாகி சிறிலங்கா பாராளுமன்றத்தினுள் பின்கதவால் புகுந்து கொண்டிருக்கும் சிறிநிவாசன், என்றவாறாக இப்பட்டியல் நீண்டுசெல்லும்.

ஆயுதம் தாங்கிய போராட்டத்தை முன்னெடுத்து வழி நடத்திச்செல்ல முடியும் என்பதிலேயே பரவலாகப் பொது மக்கள் நம்பிக்கை கொள்ளாத நிலை; 'காக்கிச்சட்டை'யுடன் வரும் பொலிசாராலேயே இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக்கொண்டிருந்த சூழல்; மாவட்டசபைகள் என்ற மாயமானின் பின்னால் அரசியல் தலைவர் அலைந்து கொண்டிருந்த தன்மை; எமது கட்டுப்பாட்டின் கீழ் - எமதுஆளுகையின் கீழ் ஒரு அடி மண்தானும் இருக்காதநிலைமை; இதுதான் 1982இன் பொதுவான அரசியல்நிலை. இக்காலப் பகுதியில் தமது பிரகடனத்தின் மூலம் தாயகப் பகுதியில் என்ன சம்பவங்கள் நேரிடும் என்று எந்தப் பொறுப்பும் சிந்தனையும் இல்லாமல் 'துணிவோடு'' தமிழீழப் பிரகடனம்' மேற்கொண்ட பொஸ்டன் தமிழர்கள் மீண்டும்ஒருதடவை அதே யளவு பொறுப்பின்மையோடு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதோ எமது படையணி என்றுகுதூகலிக்கும் மக்களும், சொந்த பலத்தில்— சொந்தக் காலில் — சொந்த மண்ணில் எழுந்து நிற்கும் தலைமையும், விமானக் குண்டுவீச்சுக்களும், ஷெல் வீச்சுக்களும், துப்பாக்கி முழக்கங்களும் நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்து விட்டபோதும் உறுதிதளரா மனோநிலையும் இப்போதைய அரசியல் யதார்த்தங்கள் அன்று எந்த அடிப்படை ஆதாரங்களும், அரசியற் சூழ்நிலைகளும் இல்லாத நிலையில் ''தமிழீழப் பிரகடனம்'' செய்த பொஸ்டன் தில்லையம்பலம் இன்று ''இலங்கை ஒருமைப்பாடுள்ள நாடாக இருக்க வேண்டும் என்று விரும்புவதாகவும், சமஷ்டி முறையை ஆராய வேண்டும் என்றும், சரியான முடிவை எடுக்காது விட்டால் எமது செயலின்மை காரணமாகத் தமிழீழம் தோன்றுவதற்கு வழி சமைத்தவர்கள் ஆகி விடுவோம்'' என்றும் எச்சரிக்கையுடனான போதனையைச் சிறிலங்கா அரசிற்கு விடுத்துள்ளார். இது தமிழீழக் கோரிக்கையின் மீதும், தமிழீழத் தாயகத்தின் மீதும் பொஸ்டன் தில்லையம்பலத்திற்கு இருக்கும் பற்றுறுதியின் வெளிப்பாடா?

இறுதியாகச் சர்வகட்சி மாநாடு - அரசியல் தீர்வு - பாராளுமன்றத் தெரிவுக் குழு போன்ற வார்த்தைகள் எல்லாம் கூட பம்மாத்தான பகட்டு என்று ''ஜனநாயகப் பாலதக்கு'' சென்று விட்டவர்கள் கூட கையைப் பிசைந்து கொண்டு புலம்பும் இன்றைய சூழலில் ''எமக்கு முன்பாக இருக்கும் சகல யோசனைகளையும் ஆராய வேண்டும்'' என்று தில்லையம்பலம் ஆலோசனை கூறுவது யாருக்கு?

தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு காணலாம் என்று போதித்து வந்த சோவியத் யூனியன் நெல்லிக்காய் மூடை போல சிதறிப் போய் விட்டது. உலகரங்கில் புதுப் புதுத் தேசங்கள் உருவாகி வருவதுடன், ஒவ்வொரு தேசிய இனமும் தனக்கென ஒரு அரசைத் தாபித்துக் கொள்ள முனைந்து வருகின்றன. அந்த வகையில் பூமிப் பந்தின் வரைபடமே புதியஎல்லைக் கோடுகளைக் கிழிப்பதற்காக மீள வரையப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கிழக்கு ஐரோப்பா முழுவதிலும் கூட இன்று பல புதிய தேசங்கள் பிறப்பெடுத்து விட்டன. தேசிய இனங்கள் ஒவ்வொன்றும், தமக்குரிய சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் உரிமையுடையன என்பது அங்கீகரிக்கப் பட்டு வருவது இப்போது புதுமையானதல்ல.

உலக அரங்கின் நிகழ்ச்சிப் போக்குகள் தேசிய இனத்துவத்தின் எழுச்சியையும், வளர்ச்சியையும் எடுத்துக் காட்டும் இன்றைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழ் மக்களின் போராட்டம் கனியாகும் காலத்தை எட்டிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் - ''மாறி வரும் சூழலுக்கு ஏற்ப சிந்தித்து தமிழீழக் கோரிக்கையைக் கைவிட வேண்டும்' என்ற பொஸ்டன் தில்லையம்பலத்தின் ஆலோசனை நகைப்பிற்குரியதாகும். கேலிக்குரியதாகும். பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு எந்தப் பலமும் இல்லாத நிலையில் தமிழீழம் பற்றிய கனவில் தீவிர

(4ஆம் பக்கம் பார்க்க)

## உன்போல் ஒருவரைக் கண்டேனில்லை

சாந்தியைத் தமிழர் காண
சத்திய வேள்வி செய்தாய்!
மாந்தருள் எவரும் செய்யா
மகிமையைச் செய்தாய் ! — ஈழம்
இந்தியர் வருகை யாலே
இடர்படும் நிலைமை கண்டே
ஏந்தினாய் நீய கிம்சை!
உயர்நிலை கண்டாய் வாழ்வில்!

மண்ணினை மீட்கும் போரில்
மாபெரும் தியாகம் செய்து
பெண்ணினப் பங்கை நீயும்
பரப்பிலே விரியச் செய்தாய்!
பெண்ணியம் தன்னில் வீரம்
ஒன்றென உணர்த்தி நின்றாய்!
அன்னையே பூபதி உன்போல்
ஒருவரைக் கண்டே னில்லை!

தளர்ந்திடும் வயதில் அம்மா
தளர்ந்திடா உள்ளம் கொண்டாய்!
வளர்ந்திடும் சரிதம் தன்னில்
விலக்கிட முடியா தானாய்!
மறைந்ததும் மறையா புகழை
மனங்களில் பெற்று விட்டாய்!
நிறைவினைக் கண்டாய் திலீபன்
அறவழி சுமந்த தாலே!

ஈழப் போராட்டம் இங்கு
இளைஞர்க் குமட்டு மல்ல.
வாழப்போர் செய்வ தற்கு
வயதெல்லை இல்லை; என்ற
தாளாத உண்மை தன்னை
தரணிக்கு உணர்த்தி விட்டாய்!
வாழ்வாயே மனிதம் எங்கும்
வாழ்கின்ற வரையில்; வாழ்க,

★ ★

❁ இளந்திரையன்




குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே அழகு.

— நாலடியார்

## விளை நிலம்

காடுகள் பற்றைகள் வெட்டினோம் — பெரும்
கட்டைகள் தீக்கிரை ஆக்கினோம்.
வேருகள் கிண்டியே போக்கினோம் - தினம்
வெட்டை வெளி உருவாக்கினோம்.

கோடாலி மண்வெட்டி பிக்கானும் - நல்ல
கூரான கத்திகள் பாரைகள்
ஏராளம் எங்களின் கை வழி - தினம்
போராடி விளைநிலம் ஆக்கினோம்.

பென்னம் பெரிய கற்பாறைகள் - வரின்
பாரிய ஆமாரால் நொறுக்கினோம்.
பின்னும் டயின மைற்றினால் - கல்லுப்
பிளந்து சீராக்கினோம் தறையினை.

இன்ன வகையில் இடையின்றித் - தறை
இரண்டு மூன்று தரம் கொத்தினோம்!
பின்னும் இருதரம் சாறினோம் - பெரும்
காடு வயல்வெளி ஆனது.

- செவ்வேள்

## பறவைகள்

### .... சில செய்திகள்

ஃ தற்போது வாழும் எந்தப் பறவைக்கும் பற்கள் கிடையாது.

ஃ ஆதிகாலத்தில் வாழ்ந்து அழிந்த பறவையான ஆக்கியோப்பிரறிக்ஸ் (Archeopteryx) எனும் பறவைக்கு பற்கள் காணப்பட்டதாம்

ஃ எல்லாப் பறவைகளும் கொம்புப் பொருளாலான அல (சொண்டு) கினைக் கொண்டிருக்கும். உணவுப் பழக்கங்களிற்கேற்ப அலகின் அமைப்பு வேறுபடும்.

ஃ பறவைகளுள் ஏறத்தாழ 8600 இனங்கள் வரை காணப்படுகின்றன.

ஃ தற்போது உயிர் வாழும் பறவைகளுள் மிகப்பெரியது தீக்கோழியாகும். இது 2 மீற்றர் வரை வளர்வதுடன் 150 கிலோ கிராம் நிறையையும் கொண்டிருக்கும்.

ஃ கியூபா நாட்டு சதுப்பு பகுதியில் காணப்படும் பாடும் பறவையே (Humming Birds) உலகில் மிகச் சிறியது ஆகும். இதன் நீளம், சொண்டு நுனியிலிருந்து வால் நுனி வரைக்கும் 2.24 அங்குலம் மாத்திரமே நிறை 0.056 அவுன்ஸ். இப்பறவையில் ஆணை விட பெண் கால் அங்குலம் பெரிதாக இருக்கும். பறவைகள்சுறுசுறுப்பானவை. அவற்றின் மூளை, கண், கேட்டற்புலன் நன்கு விருத்தியடைந்திருக்கும்.

ஃ பறவைகளில் ஒலியை எழுப்பும் குரல் நாண்கள் நன்கு விருத்தியடைந்துள்ளன. இனப்பெருக்கலில் இணை தேடவும், பாதுகாப்பிற்கும், தம் இனத்தோருக்கு சுற்றாடலின் எல்லையை அறிவிக்கவும், குஞ்சுகளைப் பராமரிக்கவும் இவை ஒலியெழுப்புகின்றன.

ஃ பெரும்பாலான பறவைகளில் இரண்டு குரற்பெட்டிகள் காணப்படும். இவற்றில் ஒன்று பொதுவான சந்தர்ப்பங்களிலும் மற்றையது ஆபத்து வேளைகளிலும் பயன்படும்.

ஃ பறவைகள் உடலை மூடி பாதுகாக்கவும், வெப்பநிலைச் சீராக்கலுக்கும் இறகுகளைக் கொண்டுள்ளன.

ஃ பறப்பதற்காக முன் அவயவங்கள் இரண்டும் சிறகுகளாகத் திரிபடைந்திருக்கும். பின் அவயவங்கள் நீரிலோ, தரையிலோ இடப்பெயர்ச்சியடைய சிறப்படைந்திருக்கும்.

ஃ இவற்றின் உடல் வெப்பநிலை மாறாததாகும். இளஞ்சூட்டுக் குருதி நிலையான குருதிச் சுற்றோட்டத்தைக் கொண்டுள்ளன.

ஃ வெளவால் பறப்பினும் அது பறவையல்ல. இது பறக்கும் முலையூட்டி ஆகும். வெளவால்களில் மாத்திரம் 950 இனங்கள் உயிர் வாழ்கின்றன.

தொகுப்பு:
ஹம்ஸானந்தி

## அதிதிறன் கணனி (Super Computer)


அதிதிறன் கணனிகள் உயர்நிலைக் கணிப்பீடுகளை அதிக விரைவில் கணிக்க வல்லவை. செய்மதிகளில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு பூமியைப் பற்றிய ஆய்விற்கும், விஞ்ஞானம் பொறியியல், தொழில் நுட்பவியல் போன்றவற்றிற்கும் அதிதிறன் கணனிகள் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

தற்காலத்தில் இக்கணனி பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு மேலதிக பல தன்மைகளைப் பெற்றுள்ளது. கைத்தொழில், அணு ஆய்வு, இயக்கவிசை ஊர்திகள் போன்றவற்றிலும், செய்மதிகளிலிருந்து பெறப்படும் தரவுகளைக் கொண்டு வானியல் ஆய்வு. எரிபொருள்களும் அதன் தாதுக்கள் பற்றிய ஆய்வுகளிலும் அதிதிறன் கணனி உபயோகிக்கப்படுகிறது. காலநிலையில் ஏற்படும் மாற்றங்களையும் இக்கணனி உதவி கொண்டு முன்கூட்டியே அறிய முடிகின்றது.

1985-இல் உருவான கிறே — 2 அதிதிறன் கணனி வினாடிக்கு 120 கோடி கணிப்பீடுகளைச் செய்ய வல்லது. நவீன கிறே - வை - எம்.பி (Cray — Y. M. P) வினாடிக்கு 300 கோடி கணிப்பீடுகளையும், ஈ.ரி.ஏ—10 வினாடிக்கு 1000 கோடி கணிப்பீடுகளையும் செய்ய வல்லன.

- கிருபா

# 6-வது ஆண்டுநினைவஞ்சலி



தாயின் மடியில்:

14-11-1967

மண்ணின் விடிவில்:

2-4-1987

## வீரவேங்கை பாலச்சந்தர்

(ஞா. லஷ்மீகரன்)

கவிதை ஒன்றும் தோன்றவில்லை - எனக்கு
என் கண்ணீரும் ஓயவில்லை
பாசமென்ற தீயினில் என் நெஞ்சம்
பற்றி எரிகின்றதே பாலச்சந்தரா!
எனக்கு நெஞ்சமொன்று இருந்துவிட்டால்
அது உன்னோடு அழிந்திருக்கும் பாலச்சந்தரா!
இருந்தும் உன்னோடு உடன் பிறந்த உடன் பிறப்பை
நினைத்துவிட்டால் எனக்கு நெஞ்சம் - ஒன்று
வேண்டும் என்றாய் - பாலச்சந்தரா!
நீ இங்கு இருந்துவிட்டால் அணையாத தீபம் ஒன்றாய்
ஒளி வீசும்
நேரம் - இங்கு அணைபோட்டுத் தடுத்தானே
உன் உயிரைச் சிங்களன்
குண்டு துளைபோட்டு எடுத்தானோ
விலையாக வில்லையடா உன்மானம்
வீரமரபாக வந்த தீரம் மண்ணின் வித்தாகப் போனதடா!
உன்னை மண்ணுக்கே ஈந்துவிட்டோம்
நாமும் மண் விடிவிலே பங்குகொள்வோம்
செம்மனச் செல்வன் உடன் வெந்த மண்
ஈரம் காக்க கண்ணீரை
உதிர்த்து எங்கள் காவிய நாயகனை
நினைத்து உருகுகின்றோம்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை,
வெற்றிலைக்கேணி.

பாலச்சந்தர்
குடும்பத்தினர்

(4605)

# பிரான்பற்று

## மூன்று தினங்கள் நடந்த பாசறை

இவ்வாறு சமூக நீதிக்கும், பொது வாழ்வுக்குமான பல போராட்டங்களில் குருஷேத்திரமாக இருந்த இக்கிராமங்களின் மத்தியில் செங்கற்படை விநாயகர் ஆலயம் உள்ளது. கடந்த 25ஆம் திகதி இவ் ஆலய மைதானம் திடீரெனக் களை கட்டத் தொடங்கியது. அன்றுதான் கிராமிய எழுச்சிப் பாசறை ஆரம்பமாகியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துப் பிரிவினரும் இக்கிராமத்தின் அடிப்படை அலகுவரை தமது கால்களை ஆழமாகப் பதித்துக் கொண்டனர். கிராம மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அனைத்தும் கேட்டு அறிந்து கொள்ளப்பட்டதுடன் சில சாத்தியமான தீர்வுகளுக்கும் வழிவகுக்கப்பட்டன.

அத்துடன் மந்த நிலையில் இருந்து வரும் கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதற்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு மக்கள் மத்தியில் புதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த மூன்று தினங்களும் ஆலய மைதானம் மட்டுமல்ல, அந்த இரு கிராமங்களுமே எழுச்சி பெற்றுக் காணப்பட்டன. மனச்சுமைகள் நிறைந்த கிராமிய மக்கள் மனங்களில் புதிய உற்சாகம் தென்பட்டது.

ஆலய மைதானத்தில் மின்னொளி பரவியிருந்தது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஆலய மைதானத்தில் கிராமியக் கண்காட்சி ஒன்றை நடாத்தியது. அந்த மூன்று தினங்களும் இரவு பகல் என்ற பேதமின்றி ஆயிரக்கணக்கான மக்கள் கண்காட்சியை பார்வையிட்டனர்.

தமிழீழத்தின் விவசாயக் கொள்கையைத் தெளிவாகச் சித்திரிக்கும் காட்சிகள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கைச் சித்திரிக்கும் புகைப்படக் காட்சி, தமிழீழத்தின் சக்தி வளங்களை இனம் காட்டும் அம்சங்கள், தமிழீழத்தின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள், உட்கட்டுமான அம்சங்கள், வர்த்தகம், விலங்கு வேளாண்மை, கடல் வளம், பனைவளம், செய்தித் தொடர்பு, உணவுபதனிடல் போன்ற பல்வேறு துறை சார்ந்த அம்சங்களை எடுத்து விளக்கும் கண்காட்சியைப் பார்த்த மக்கள் தன்னம்பிக்கையுடனும், மனநிறைவுடனும் காணப்பட்டனர்.

தினமும் மேற்படி ஆலய மைதானத்துக்கு கிராமத்துச் சிறுவர்களும், இளைஞர்களும் முண்டியடித்துக் கொண்டு திரண்டு வந்திருந்தனர், இவர்களுடன் விடுதலைப் புலிகளும் இணைந்து கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். கரப்பந்து, தாச்சி ஆகிய விளையாட்டுக்களுடன் கம்படி சிலம்படி போன்ற பாரம்பரிய போர் விளையாட்டுக்களிலும் கிராமத்து இளைஞர்கள் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

ஆலய மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அரங்கில் தினமும் பல அறிவியல் கருத்தரங்குகள், அரசியல் தெளிவுரைகள் இடம்பெற்றன. சேர்ந்தாற்போல் கிராமிய இசைப் பாடல்கள், கிராமிய நடனங்கள் போன்ற பல்வேறு கிராமியக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சிகளின்போது கிராம மக்களது பாரம்பரியக் கலை அம்சங்கள் பல அவைக்காற்றப்பட்டன.

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட சமூகப் பின்னணிக்குள்ளும், பொருளாதாரக் கட்டமைப்புக்குள்ளும் மாற்றம். சில பழமை வாய்ந்த பழக்கவழக்கங்களாலும், சில மூடநம்பிக்கைகளுக்குள்ளும் மூழ்கிக் கிடந்த ஒரு கிராமிய மக்கள் சமூகத்துக்கு, நடந்து முடிந்த கிராமிய எழுச்சிப் பாசறை புத்துணர்ச்சியையும், புதிய பல நம்பிக்கைகளையும், தாய்மண் மீது பற்றையும் ஏற்படுத்தியிருக்கும் என்பது எமது கணிப்பு.

## திரிபோஷா வெற்றுப் பைகள் ஏலவிற்பனை

5000ற்கும் அதிகமான திரிபோஷா வெற்றுப்பைகள் 15-04-1993 அன்று காலை 10.00 மணிக்கு குருநகரிலுள்ள மத்திய மருந்தகம் + மகப்பேற்று மனையில் (தங்கம்மா வைத்தியசாலை) 3 கூறுகளாக பகிரங்க ஏலத்தில் விடப்படும். இவற்றை அன்றையதினம் காலை 9.00 மணிமுதல் அங்கு பார்வையிடலாம். ஏலத்தில் வெல்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி அதே தினம் பிற்பகல் 3.45 மணிக்குள் அவற்றை அப்புறப்படுத்தல் வேண்டும்.

நன்றி

வைத்திய கலாநிதி
பொ, இரத்தினசபாபதி
பிராந்திய பணிப்பாளர்,
29-03-93 (சி 6316)

# 42-ம் நாள் நினைவும், அந்தியேட்டி கிரியையும்



## செல்வி சிவசுப்பிரமணியம்

அனுராதா (வாணி)

மலர்வு: 1978-10-12

உதிர்வு: 1993-02-21

எங்கள் அன்புச் செல்வமே உன் உருவம் கண்ணில் ஆடுதடி
உன் நினைவு நெஞ்சில் தவழுதடி
உன் குரல் காதில் ஒலிக்குதடி நீ எம்மை
விட்டுச் சென்றாலும் உன் நினைவு எம்மனதை
விட்டு நீங்காதடி உன் எண்ணமெல்லாம்
எம் இதயத்தில் கொழுந்துவிட்டு எரியுதம்மா.


உனது பிரிவால் வாடும்,
அப்பா, அம்மா, அண்ணன்,
தம்பி, உறவினர்.

பரமேஸ்வரி பவனம்,
சித்தம் பாதி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(4601)

# நினைவஞ்சலி

## மேஜர் கிண்ணி



கந்தசாமித்துரை ரவீந்திரன்
வேம்படி
வல்வெட்டித்துறை

வீரஜனனம் - வீரச்சாவு
25-07-66 - 10-07-92

## கப்டன் முரளி



கந்தசாமித்துரை சிறிதரன்
வேம்படி
வல்வெட்டித்துறை

வீரஜனனம் - வீரச்சாவு
10-05-61 - 02-04-87

அணிதிரள்வோம் அணிதிரள்வோம்
இது எங்கள் அன்னை நிலம்
அணிவகுப்போம் அணிவகுப்போம்
இது எங்கள் அண்ணனின் பாதை
படையெடுப்போம் படையெடுப்போம்
இது எங்கள் தமிழீழ எல்லை
வெற்றி கொள்வோம் வெற்றி கொள்வோம்
இது எங்கள் தமிழீழ வளநாடு
என்றுரைக்கும் மாவீர வேங்கைகள்
வீறுநடையும் அவர்தம்
நேரான கொள்கையும்
அவர்தம் வீரர்களின் மனங்களிலே
விடுதலைச் சுடரை வளர்த்திருக்கும்.

- குடும்பத்தினர்

வேம்படி,
வல்வெட்டித்துறை.

[4602]

# இந்தி, இந்து, இந்துஸ்தான்

## இந்திய அரசியலில் மத தீவிரவாத எழுச்சி

பாலகுமாரன்

கடந்த வருடம் டிசம்பர் 6 ஆம் திகதி அன்று அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது எழுந்த ஓலங்களை கேட்டவர்கள் அது சிதைந்து நிர்மூலமாவதைப் பார்த்தவர்கள் இன்றும் அன்று நடந்த கோரம் பைத்தியம் பிடித்த பிசாசுகள் தம்மை வந்து குதறும் மனோநிலைக்கு தமைத் தள்ளிவிடுவதாக கூறுகிறார்கள். இடிந்து சிதைந்த மசூதியிலே தமது பளபளப்பான திரிசூலத்தை, செலுத்திய காவி உடை சந்நியாசி 'ஜெய் சிறிராம்' எனஉரக்கக் கூவினார். 'இராமருக்காக உயிரைவிட வந்திருக்கிறோம்' என்றார். மார்பிலே நெருப்பினால் இராமரின் பெயரைப் பொறித்த இன்னுமொருவர். 'இந்துவின் குருதி இன்று கொதிக்கட்டும். இல்லாவிட்டால் அது வெறும் தண்ணீர்' என்றார் வேறொரு சாது. 'இப்போது இடிப்பது அனுமாரின் கதாயுதம்' என்றார் மற்றுமொருவர்.

கண்களிலே கோர வெறி தாண்டவமாட கண்ணில்பட்ட பத்திரிகையாளர்களை நொருக்கியது இன்னொரு பாவிக் கூட்டம். அதுமட்டுமன்றி நச்சீரா குப்தா என்கின்ற பத்திரிகையாளரும் இன்னொரு பெண்மணியும் பட்டப்பகலிலே பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். 'எல்லாம் இராமருக்காக' என்ற கோஷம் வானைப் பிளந்தது. சூரியன் செந்நிறமான போது நான்கு நூற்றாண்டு கால செந்நிறத் தூசி அயோத்தியில் அன்று எரிக்கப்பட்ட முசுலிம் வீடுகளில் இருந்து கிளம்பிய கருப புகையோடு கலந்தது. ஆலயமணி முழங்க புதிதாக அமைக்கப்பட்ட இராமர் ஆலயத்தில் ஒளியேற்றப்பட்ட போது இந்தியாவின் 12 கோடி முசுலிம் மக்கள் மனதிலே காரிருள் பரவியது. பாரதீய சனதாக் கட்சியின் முகத்திலோ கள்ளச் சிரிப்பு. 'நம்பி ஏமாந்தேன். என்ன செய்வேன்' என்ற நரசிம்மராவிற்கு 'இம் மசூதித் தகர்ப்பு உங்கள் உள்விருப்ப வெளிப்பாடு' என்று கடிதம் எழுதிவிட்டு கட்சியை விட்டு வெளியேறினார் அகமது எம்.பி. இது ஒரு காட்சி.

இனி இன்னொரு காட்சி. மசூதி. தகர்ப்பின் பின்னர் பம்பாய், கல்கத்தா, அசாம், போபால், பெங்களூரில் பெரும் இனக்கலவரங்கள் பொலிசார் பார்த்து நிற்க முசுலிம்கள் படுகொலை. இந்திய பிரிவினைக்கு முன்பாக 1940 களில் நடந்த மிகமோசமான இந்து, முசுலிம் கலவரத்திற்கு ஒப்பானதாக இம்முறைக்கலகம் இருந்தது பம்பாய் நகரிலோ இந்திய மனிதத்தின் இறுதி அத்தியாயங்கள் அரங்கேறின. பட்டப்பகலிலே முசுலிம் பெண்களை பலரும் பார்த்து நிற்க வீடியோக்கள் படம் பிடிக்க தயாராக இந்துக்குண்டர் கூட்டம் கூட்டங்கூட்டமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர். எடுக்கப்பட்ட வீடியோக்கள் வெற்றியின் இறுமாப்பை எங்கும் காண்பிக்கப்பட இந்தியாவின் மானம், தருமம், சத்தியம் எங்கோ தொலைந்து போயின. பின்பம்பாயில்கல்கத்தாவில்அதேஇடங்களில்பாரிய குண்டு வெடிப்புகள். பாக்கித்தான், ஈரான், இசுலாமிய பயங்கரவாதிகள் என காரணங்கள் கற்பிக்கப்பட்டு மனித குலத்திற்கு எதிரான சர்வதேச பயங்கரவாதிகள் ஒழிக்கப்படவேண்டும் என இந்தியா ஓலமிட அதற்கு மேற்கத்தைய நாடுகள் தாளம் போட ஒரு நாடகம் மீண்டும் அரங்கேறியது. ஆனால் உண்மையின் மறுபக்கம் என்ன? யார் பயங்கரவாதிகள்? யார் பழமையவாதிகள்? டிசம்பர் 6 ஆம் திகதி தான் இந்தியாவின் சனநாயகம், மதச்சார்பின்மை, தேசியஒருமைப்பாடு, தகர்க்கப்பட்டதா? அதற்கு முன் எல்லாம் ஒழுங்காக இருந்ததா? இனவாதத்திற்கு யார் பொறுப்பு? கேட்கப்பட வேண்டிய கேள்விகள் இவை. விடைகள் அறியப்பட வேண்டியவை.

இன்று இந்தியாவின் புதிய அரசியல் அணியாக காங்கிரசிற்கு மாற்றுக் கட்சியாக எவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சி உருவெடுத்தது? கட்சி என்ற வகையில் 1980 இல் தோற்றம் பெற்ற இக் கட்சிக்கு 1984 ஆம் ஆண்டு லோகசபையில் இரண்டேயிரண்டு இடங்கள் மட்டுமே இருந்தது. பின்பு அயோத்தியில் இராமர் கோவிலுக்கு அடிக்கல் நட்டதால் 89 ஆசனங்கள். பின் அயோத்தியில் கரசேவை செய்து முசுலிம்களின் இரத்தத்தை ஒடப் பண்ணியதால் வெகுமதி 119 ஆசனங்கள். 1992ஆம்ஆண்டின் இறுதியில் (பிரணாப்ராய் என்ற கருத்துக்கணிப்பாளரின் கருத்துப்படி) தேர்தல் நடத்தியிருந்தால் 170 இடங்களில் இலகுவில் வெற்றி. இனிவரும் தேர்தல்களில் ஏறுமுகம் எனவே இன்றைய இந்திய அரசியல் பாரதீய சனதாவோடு இரண்டறக் கலந்துவிட்டது. இவ் விசித்திரம் எவ்வாறு நிகழ்ந்தது? இங்கே தான் இன்றைய இந்தியாவின் தத்துவ வெளிப்பாடாக இந்துத்துவ (Hindutuva) அல்லது இந்துமத மரபுவாத எழுச்சி அறியப்பட வேண்டியதாகின்றது. இன்று முகங்கள் பல வாக இருந்தாலும் இம் மரபு வாதத்தின் மூலம் ஒன்றே. அதுவே 1980 இல் உருவான பாரதீய சனதாவிற்கோ அல்லது இதன் தோற்றத்திற்குவழிவகுத்தசனசங்கத்திற்கோ மூலமாகும் 1925 களில் உருவான ஆர். எஸ். எஸ்- (R. S. S.) எனப்படும் ராசுத்திரிய சுயம் சேவா சங்கமே அது இதன் தோற்றமே இந்துமதவாதத்தின் தோற்றமாகின்றது. 'இந்துக்களின் பூமியில் இருப்பது இந்து தேசம். இருக்கவேண்டியதும் அதுவே' என்பதே இவர்களின் மூலமந்திரம் முசிலிம்கள் அற்ற அகண்ட இந்து இராச்சியத்தை உருவாக்குவதே இவர்கள் இலட்சியம். 1948 இல் மகாத்மா காந்தி கொலை செய்யப்பட காரணமாயிருந்த நாதுராம் கோட்சே இவ் அமைப்பைச் சேர்ந்தவன். அன்று இவ் அமைப்பு தடைசெய்யப்பட்டு அதன் தலைவரான கோல்கல் கரும் கைதானார். பின் தடை 1949-ல் நீக்கப்பட்டது. பின் இதன் வளர்ச்சியைக் கண்டும் காணாததுபோல் சுயலாபத்திற்காக காங்கிரசு பேசாமல் இருந்தது. பின் 1975-ல் அவசரகால நிலையின்போதுமீண்டும் தடை. இப்போது அயோத்திவிவகாரத்தின் பின் மூன்றாம் தடவையாக தடை. ஆனால் இப்போது ஆர்.எஸ்.எஸ் பாரிய இராட்சத வடிவம் பெற்றுவிட்டது. இதனோடு இதன் பல்வேறு முகங்களாக விளங்கும் விசுவ இந்து பரிசத் (V.H.P.) பஜ்ரந்தள் (Bajrangdal) போன்றவையும் தடையாகின ஆனால் ஆர்.எஸ்.எஸ் ஒவ்வொரு தடைக்குப் பின்னரும் மிக நுணுக்கமாக திட்டமிட்ட அரசியல் சமூக பண்பாட்டு முன்னணி அமைப்புகளை கட்டி வேரூன்றி வளர்ந்துவிட்டது. 1950களில் தனது அரசியல் முன்னணி அமைப்பான ஜனசங்கத்தைக் கட்டிற்று. மாணவர்களை அணிதிரட்ட A B V P எனப்படும். அகில பாரதீய வித்தியா பரிசத்தைக் கட்டிற்று. V H.P எனப்படும் விஷ்வ இந்து பரிஷத்தை உருவாக்கி அயோத்தி இராம ஜென்ம பூமி விவகாரத்தை நுணுக்கமாகக் கையாண்டது. இவற்றைவிட தனது தீவிரவாத செயற்பாடுகளுக்காக 1985 களில் பஜ்ரந்தள் எனப்படும் இந்து தீவிர இராணுவ பிரிவொன்றை கட்டி வளர்த்து வந்துள்ளது. இவர்கட்கு பாபர் மசூதியை இடிக்க பயிற்சி கொடுத்து அவர்களைப் பயன்படுத்தி மசூதியைத் தரை மட்டமாக்கிற்று. அதைவிட பஞ்சாப் காஷ்மீர் போன்ற கொந்தளிப்பான இடங்களில் இந்து சிவசேனை, இந்து சிவசக்தி, திரிசூலசேனை என்கிற பெயர்களில் பஜ்ரந்தளைப் பயன்படுத்தி வருகிறது. இத்தனையையும் செய்துவிட்டு ஆர்.எஸ்.எஸ் தனைமை அப்பழுககற்ற புனிதத்தன்மை கொண்ட மூத்தோர்களான பாளாசாகிப தேவரஸ், ஷேசாத்திரி, ராஜேந்திர சிங் போன்றோரைக் கொண்டதாக தன்னை வேறுபடுத்திக் காட்டுவதில் வெற்றியும் பெற்றுள்ளது. தடைக்குமுன்1948-ல் 3500 கிளைகள் 40, 000 உறுப்பினர்கள். இன்றோ 30 000 கிளைகள் 35 இலட்சம் உறுப்பினர்கள். இப்போதைய தடைகளோடு 50 000 கிளைகளை உருவாக்குவோம் என்கிறார்கள் இவர்கள். எனவே VHP தலைவரான அசோக் சிங்கல், சிவசேனைத்தலைவர் பால்தாக்கரே, பஜ்ரக்தள் இணைப்பாளர் வினைகட்டியாருக்கோ தடைஒருபொருட்டல்ல. வினைகட்டியார் ஒரு 'பா ச. கட்சி எம்பியும் கூட' எனவே இவையெல்லாம்ஒன்று இணைந்து தமது எண்பதுக்கும் மேற்பட்ட பல வெவ்வேறு அமைப்புகள் மூலம் மேலும் முனைப்பாக செயலாற்றி வருகின்றன. இத் தடைகள் அவர்களை எதுவும் செய்யப்போவதில்லை.

எனவே இன்று காங்கிரசுக் கட்சி இத்தகைய மதவாத அமைப்புகளால் முற்றுகை இடப்பட்டுள்ளது. இதை முறியடிக்கும் வலுவோ தார்மீக பலமோகாங்கிரசிடம்இல்லை. ஏனென்றால் இந்திவலயம் எனப்படும் பல வட இந்திய மாநிலங்களில் தனது அரசியல் எதிர்காலத்தை பணயம் வைக்க இவர்கள் தயாராக இல்லை. ஏனெனில் இம் மதவாத சக்திகளை வைத்து அரசியல் ஆதாயம் தேடியதில் காங்கிரசிற்கும் பெரும் பங்குண்டு. இந்திராகாந்தி அம்மையார் காலத்திலே அவர் பஞ்சாப்பில் காஷ்மீரில் கையாண்ட இனமத பிரித்தாளும் தந்திரங்கள் பிரபலமானவை. அவரது மகனான ராஜீவ்காந்தியோ இந்திஇந்து வோட்டுக்களைத் தாம் பெறுவதை உறுதிப்படுத்த மீண்டும் இந்து மறுமலர்ச்சியை உருவாக்கும் வகையில் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களைத் தொலைக்காட்சி நாடகமாக்கி மக்கள் முன்னே கடவுள்களை உலவவிட்டார். பெருந்தாக்கத்தை இவை ஏற்படுத்தின. ஆனால் இவற்றின் பலன் காங்கிரசிற்கு சேரவில்லை. 'ஜெய் சிறிராம்' கோசமிட்ட பா.ச. கட்சிக்கே பலன்.

நாடகத்தில் நடித்த சீதையும் ராமரும் பா.ச. கட்சியில் சேர்ந்து நாடக வேடத்திலே மக்கள் முன்தோன்றி பக்திப் பரவசத்தில் மக்களை ஆழ்த்தினர். எனவே இன்று பா.ச. கட்சியை மட்டுமே குறைகூறி என்ன பயன்? மிதவாத ஒரு நிலைப் போக்குள்ள மதச்சார்பற்ற கட்சிகளாகக் காட்டிக் கொண்ட இரு கட்சிகளின் நிலை என்ன? சனதாக் கட்சியோ, சனதாதள்(இதுஅஜித்சிங் தள் என்று மேலும் பிரிவு) லோக்தள், சமாசவாதி சனதா கட்சி என்று சிதைந்து விட்டது. எதிர்காலமேயில்லை. காங்கிரசோ என்றுமில்லாதவாறு உட்கட்சிப்பூசல், பிரதேச வேறுபாடு, கட்சிக்குள் சனநாயகம் இன்மை தலைமையின்மை காரணமாக இன்று செயலற்றுப்போய்விட்டது. இதைப் பயன்படுத்தி இன்று பா.ச.இந்திய உயர்நிர்வாகத்தில் பல மாநிலங்களில் பாதுகாப்புக்காவல் அமைப்புக்களில், விசேட காவல்அமைப்புகளில் என பல முக்கிய அமைப்புகளில் முழுமையாக ஊடுருவி விட்டது. எனவே இன்று காங்கிரசிற்கும் பா.ச. விற்கும் இடையில் உள்ள இடைவெளி மிகக்குறுகி விட்டது. மேலும் இன்று காங்கிரசு பின்பற்றும் புதிய பொருளாதாரத் திட்டத்திற்கும் பாரதீய சனதாவின் பொருளாதாரக்கொள்கைக்கும் எந்தவேறுபாடும் இல்லை. எனவே தற்போது மேற்கத்தைய நாடுகளைக்கவர முழுமுயற்சியையும் பா.ச. செய்துவருகின்றது.

நிலையான ஆட்சியை, திறந்த பொருளாதாரக் கொள்கையைப்பின்பற்றத் தன்னால் தான் முடியும் என்பதில் பாரதீயசனதா வெற்றி பெறும் போது நிச்சயம் மேற்கத்தைய ஆதரவு இவர்கள் பக்கமாக சாயும். எனவே இன்று இக் கட்சி மிகமுனைப்பாக இந்தியாவின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் திசையில் முன்னேறுகிறது.

இவை ஒருபுறம் இருக்க, இன்று இந்தியக் குடிமகன் இவற்றைப்பற்றி என்ன நினைக்கிறான்? அவன் நிலை என்ன? இந்தியாவில் தற்போது உருவாகும் வர்த்தகம் சார் புதிய மத்திய வகுப்பு இந்து மத மரபு வாதத்தையே முற்றாக ஆதரிக்கின்றது. பொதுவாக இவ்வகுப்பு இந்தியர்கள் நிலை நன்றாக இருப்பதாக நினைக்கவில்லை. கலை அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு எதிலும் இந்தியா உயரவில்லை என்ற தாழ் உணர்ச்சி இவர்களிடையே மிஞ்சியிருக்கின்றது. தன்னம்பிக்கையைத் தூண்ட மதமே பயன்படுகின்றது என இவ்வகுப்பு இன்றுநினைக்கின்றது. சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகளாகியும் நிலப்பிரபுத்துவத்தின் கொடிய விலங்குகளான சாதி அமைப்பு, கொத்தடிமை, சீதனக் கொடுமையால் பெண்கள் எரிக்கப்படல் போன்ற கொடுமைகள் மாறவேயில்லை. எனவே ''இன்று சாதாரண இந்தியன் எதிர்காலம் குறித்து நிச்சயமற்றவனாக, இலகுவில் எதற்கும் இரையாகக் கூடியவனாக, ஏமாற்றம் விரக்தி உடையவனாகக் காணப்படுகிறான். எதிர்காலம் குறித்து நம்பிக்கையூட்டக் கூடிய சிந்தனைத் தெளிவுள்ள தலைமை இல்லாததால் அவன் குழம்பியிருக்கிறான். இக் குழப்பத்தை எவரும் சரியாகத் திட்டமிட்டு தமக்கு சார்பாகப் பயன்படுத்த முடியும். இதைத்தான் இன்று பாரதீயசனதா கட்சி செய்கின்றது. இவர்களின் மூடத்தனமான வெறித்தனமான செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில் இந்தியன் தவறாக நினைக்கப்போவதில்லை. மாறாக ஏதோ ஒரு வகையில் தன்னை தனது ஆன்மாவை திருப்தி செய்வதாகவே அவன் நினைப்பான்'' என்று இந்திய சமூகவியலாளரான ரஜனி கோத்தாரி குறிப்பிட்டார். இந் நிலை நீடிக்குமானால் இந்து மத மரபுவாதஎழுச்சி தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

---

இரு முஸ்லிம்

விளக்கையுயர்த்திசைகை காட்டியபோதும் படகு நெருங்கி வந்தது இதனைக் கண்ட இருவரும் கடலில் குதித்த போது கடற்படையினர் தமது படகால் மீனவ படகை மோதிச் சென்றனர். இதனால் இப் படகு சின்னாபின்னமாகியது. இவர்கள் இருவரும் மூன்று நாட்களாகக் கடலில் தத்தளித்த பின் முல்லைக் கடற்கரையை வந்தடைந்தனர்.

இவர்கள் வருவதைக்கண்ட பொதுமக்கள் இவர்களை அழைத்துச்சென்று தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

திருமணமாகி இரு பிள்ளைகளின் தந்தையரான இவ்விரு முஸ்லிம் மீனவர்களையும் விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் பகல் 11 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிமாரியானா கொறடாப்பியிடம் கையளித்தனர்.

மேற்படி கையளிப்பு நிகழ்வில் விடுதலைப் புலிகள் தரப்பில் முல்லை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா. தமிழன்பன் மற்றும் முல்லை மாவட்டத் தளபதி பாண்டியன், திருக்கோணமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோரும், பல பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

---

## கடலில் மூழ்கி மரணம்

ஆழியவளை கொக்கிளாயிலிருந்து இடம் பெயர்ந்து, செம்பியன்பற்றில் தங்கியிருந்த கணபதிப்பிள்ளை விக்கினேஸ்வரன் (வயது 18) என்ற இளைஞன் கடலில் மூழ்கி மரணமானார்.

---

பத்திரிகையாளர்

குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு கொம்பனி வீதியில் நடைபெற்ற சத்தியாகிரகம் பற்றி செய்தி திரட்ட சென்ற பத்திரிகையாளர்கள் கடுமையாக தாக்கப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

விசாரணையை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பிரட்மன் வீரக்கோன் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். விசாரணை அறிக்கை பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

---

ராணுவ

கொண்டு உரைநிகழ்த்தினார்.

இக் கருத்தரங்கின் முடிவில் தும்பங்கேணி பிரதான வீதி பொதுமக்களால் சிரமதானம் மூலம் திருத்தப்பட்டது.

## அறிவித்தல்

27-03-1993 சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய எதிர்வரும் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு கீழ்வரும் தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்யலாம் என அறியத்தருகின்றோம்.

03.04.1993 சனிக்கிழமை
04.04.1993 ஞாயிற்றுக்கிழமை
10.04.1993 சனிக்கிழமை
11.04.1993 ஞாயிற்றுக்கிழமை

குறிப்பு: 09-04-1993 பெரியவெள்ளி வர்த்தக விடுமுறைதினமென அறியத்தருகின்றோம்.

வடபிராந்திய
வர்த்தக சங்கங்களின் சமாசம்

(4612) உப தலைவர் செயலாளர்



## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பும், நன்றி நவிலலும்

அமரர்
**துரையப்பா சுந்தரம்**

(இளைப்பாறிய ஆசிரியர், சிவகுரு வித்தியாசாலை வல்வெட்டித்துறை)

02 - 04 - 1993

மலர்வு 15 - 12 - 1921 உதிர்வு 04 - 03 - 1993

எமது குடும்பத் தலைவரின் மறைவின்போது, பல வழிகளிலும் உதவிகள் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், வெளியிடங்களிலிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன்,

இன்று 2-04-93 வெள்ளிக்கிழமை அதிகாலை (5 மணி முதல் 8 மணி வரை) நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையிலும், நண்பகல் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''இலக்கி வாசா''
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
02-04-93

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(6321)






1) ஐந்து வெற்றுப் போத்தல்கள் (ஜாம் அல்லது நெல்லிரசம்) கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு - சுவர் கடிகாரம்
2-ம் பரிசு - எவர்சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்
3-ம் பரிசு - மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்
மேலும் 10 ஆறுதல் பரிசுகள்.

3) பின்வரும் இடங்களில் அதிர்ஷ்டசீட்டை பெற்றுக் கொள்ளமுடியும்.

1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ்-14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
2) அறிவகம் - சாவகச்சேரி.
3) சுபாஸ் பேக்கவுஸ் - நெல்லியடி.
4) சுந்தரம் அன் சன் - சுன்னாகம்.
5) சித்திவிநாயகர் நூல்நிலையம் - ஏழாலை மேற்கு சுன்னாகம்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி/6269)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்திய இராணுவமே உலகில் கட்டுப்பாடானதாம்

## இராணுவ வழக்கறிஞர் தெரிவிப்பு

[டில்லி]

இந்திய இராணுவமே உலகில் கட்டுப்பாடான அமைப்பு என இந்திய இராணுவ நீதிமன்ற தலைமை வழக்கறிஞர் மேஜர் ஜெனரல் ஏ. சி. மங்களா தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் 10 லட்சத்திற்கும் அதிகமான படை வீரர்களைக் கொண்ட இந்த இராணுவம் மீது சில புகார்களே உண்டு. பெரும் படைக்கு இது குறிப்பிடும்படியானதல்ல என்றும் தெரிவித்தார்.

இந்திய இராணுவம் மனித உரிமை மீறல்களில் அதிகமாக தற்போது சம்பந்தப்பட்டு வருகிறது என அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபையும் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழக அனுமதி புதிய முறை தேவை

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

[கொழும்பு]

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டு புதிய அனுமதி முறையொன்று வகுக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்புஅளித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக யாழ்ப்பாண மாணவர் ஒருவர் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

## வர்த்தக நிலையங்கள் சனி,ஞாயிறு இயங்கும்

(வடமராட்சி)

சித்திரை புத்தாண்டு பண்டிகை தினத்தையிட்டு பொது மக்களின் வசதிக்காக எதிர்வரும் சனி,ஞாயிற்றுக் கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெறும். (யோ)

## கம்பன் விழா - 1993 இன்று நல்லூரில் ஆரம்பம்

நல்லூரில் ஐந்து நாட்கள் நடைபெறவிருக்கும் கம்பன் விழா இன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிறது. கம்பன் கோட்டத்திலிருந்து நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் அழகுற அமைக்கப்பட்டுள்ள விழாப் பந்தல்வரை கம்பன் உருவப் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

இன்றை நிகழ்ச்சியில் மூதறிஞர் கௌரவிப்பு மகரயாழ் விருது வழங்கல், பரிசளிப்பு, ''கம்பகளஞ்சியம்'' நூல் வெளியீடு, திறப்புரை, இசையரங்கு என்பன இடம் பெற உள்ளன.

## குருநகர் கரையில் சடலம் மீட்பு

(குருநகர்)

குருநகர் இறங்குதுறைக் கடலில் நேற்று காலை ஒரு ஆணின் சடலம் காணப்பட்டது.

இதனை அடுத்து காவல் துறையினரின் அனுசரணையுடன் சடலம் மீட்டெடுக்கப்பட்டு இனங்காணப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குருநகர் சென். றோக் சனசமூக நிலையப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தரான தவராசா (வயது 47) என்பவரது சடலமே அது எனத் தெரிவிக்கப்பட்டது. [21]

## ஒரு தொகுதி பொருள்களுடன் 'நில்கிரி' இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றிக்கொண்டு 'நில்கிரி' கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளை மற்றும் ஒரு தொகுதி அத்தியாவசியபொருள்களுடன் நாளை சனிக்கிழமை குமண கப்பல் பருத்திதுறையை வந்தடையும் எனவும் இக்கப்பலில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைக்கு அம்புலன்ஸ் வண்டி எடுத்துவரப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது குமாரி கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில் உணவு பொருள்களை இறக்கும் போதும் மேலும் இந்த இரு கப்பல்களும் உணவுப் பொருள்களை இறக்கும் என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## விமானம் நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான வேவு விமானம் ஒன்று நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் சுழிபுரம், பொன்னாலை, மூளாய், தொல்புரம், ஆகிய பகுதிகளுக்கு மேலாகவும், கரையோரப் பகுதிகளுக்கு மேலாகவும் பறந்து மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது. (41)

## சுகவாழ்வு விரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு நாளை சனி முதல் 05-05-93 வரை பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சுகவாழ்வு பற்றிப விரிவுரைகளை கைலாசபதி கலையரங்கில் நடாத்த உள்ளது.

பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், யாழ். போதனாவைத்தியசாலை மருத்துவ நிபுணர்கள் 20 க்கு மேற்பட்ட தொடர் விரிவுரைகளை வழங்க உள்ளார்கள். விரிவுரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடல்களும் இடம் பெற உள்ளன. ஆர்வமுள்ள பொதுமக்களும், சுகாதாரப் பணியாளர்களும், பல்கலைக்கழக பாடசாலை மாணவ மாணவிகளும் இவ்விரிவுரைத் தொடரில் கலந்து பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. விரிவுரைத் தொடரில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் புறநிலைப் படிப்புகள் அலகில் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப் படுகிறார்கள்.

## உதைபந்தாட்டப் போட்டி

உரும்பராய்-ஊரெழு விளையாட்டுக் கழகங்களின் ஒன்றியத்தினரால் நடாத்தப்படும் காட்சி உதைபந்தாட்டப் போட்டி நாளை உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இப்போட்டியில் காங்கேசன்துறை யங்றோயலை எதிர்த்து மயிலங்காடு சிறிமுருகனும், நாவாந்துறைசென்நிக்களஸை எதிர்த்து குருநகர் சென்றோக்சும் மோதும்.


உ
குகமயம்

## கலா ரசிகர்களுக்கான அறிவிப்பு

நாதஸ்வரகான கலாநிதி, கலாசூரிய விருதுபெற்ற
அளவையூர்
திரு. N. K. பத்மநாதன் அவர்கள்
தமிழீழம் வருகை தந்துவிட்டார் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தமிழீழ மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

(4611) நன்றி


## தமிழர்

விளக்குவதற்கு மறுத்துள்ளன.

ஆனால் வவுனியா நகரில் தற்போதும் மர்மமான முறையில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் காணாமல்போகின்றனர் என்று செய்தி கிடைத்துள்ளது.

தமிழ்ப் பொலிஸார் சிலர் தமக்கு நெருங்கிய தமிழ் குடும்பத்தவரிடம் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுள்ளனர். (தி)


ஸ்ரீதர் திரையரங்கில்...
## "தமிழோசை"
தினசரி மாலை
4 மணிக்கும் 6 மணிக்கும்
காண்பிக்கப்படுகிறது
(சி/6323)